| 34 | மத்திய மண்டலம், வார்டு எண்.32 க்குட்பட்ட வேலாம்மாள் நகர் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல வாழ்வு மையம் கட்டுதல் ந.க.எண்.3042/22/எம்.டி.5 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள் 17.12.2021 | முதலாம் அழைப்பு 22.07.22 | 1).திரு. ஆர்.செல்வராஜ் 0.35 % **குறைவு** 2)திரு. கே.கோவிந்தராஜ் 0.36 % **அதிகம்** 3).திரு. ஆர்.தங்கவேல் 0.06 % **குறைவு** 4).தி/ள்.RR என்டர்பிரைசஸ் 4.07 % குறைவு | தி/ள்.RR என்டர்பிரைசஸ் 4.07 % குறைவு |
| 35 | மத்திய மண்டலம் - வார்டு எண்.63-க்குட்பட்ட இராமநாதபுரம் 80 அடி சாலையில் திருச்சி சாலையில் நகர்புற நல்வாழ்வு மையம் கட்டுமான பணி. ந.க.எண்.3184/22/எம்டி5 | 25.00 | ப.கு.தீ. எண்.11 நாள். 24.06.22 | இரண்டாம் அழைப்பு 23.08.22 | 1).திரு. ஆர்.செல்வராஜ் (தில்லை நகர்) மதிப்பீட்டை விட 0.34% குறைவு 2).தி/ள்.சுவாதி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 2.00% குறைவு | தி/ள்.சுவாதி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 2.00% குறைவு |
| 36 | மத்திய மண்டலம் - வார்டு எண்.83-க்குட்பட்ட ஜெயில் சாலையிலுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்திற்கு அபிவிருத்தி மற்றும் மராமத்து பணிகள் செய்தல். ந.க.எண்.2985/22/எம்டி5 | 8.00 | ஆ.உ. நாள். 30.05.22 | இரண்டாம் அழைப்பு 04.08.22 | 1).திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.74% குறைவு 2).தி/ள்.ஆர்.ஆர். எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 16.53% அதிகம் | திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.74% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 37 | மத்திய மண்டலம் - வார்டு எண்.80-க்குட்பட்ட கெம்பட்டி காலனி பகுதியில் யோகா மையம் கட்டுதல் மற்றும் மருந்தக கட்டிடத்தினை நகர்ப்புற சுகாதார நல மையம் கட்டுதல். ந.க.எண்.3163/2022/எம்டி5 | 15.00 | ஆ.உ. நாள். 18.06.22 | இரண்டாம் அழைப்பு 23.08.22 | 1).திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.27% குறைவு | திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.27% குறைவு |
| நமக்கு நாமே திட்டம் | | | | | | |
| 38 | கிழக்கு மண்டலம் வார்டு எண்.50–க்குட்பட்ட உடையாம் பாளையம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் உள்ள கழிப்பறைகளை திரும்பக் கட்டுதல். ந.க.எண்.4401/2022/எம்டி5 | 25.00 | ந.நி.இஅ செயல் முறை ஆணை நாள். 03.08.22 | 06.09.22 | 1).தி/ள். ஜெயலட்சுமி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.20% குறைவு<br><br>2).திரு. ஆர்.தனபால் மதிப்பீட்டை விட 0.23% குறைவு | திரு. ஆர்.தனபால் மதிப்பீட்டை விட 0.23% குறைவு |
| 39 | கிழக்கு மண்டலம் வார்டு எண்.50–க்குட்பட்ட உடையாம் பாளையம் மாநகராட்சி மேல்நிலைப்பபள்ளியில் உள்ள கழிப்பறைகள் கட்டுதல். ந.க.எண்.4402/2022/எம்டி5 | 31.20 | ந.நி.இஅ செயல் முறை ஆணை நாள். 03.,08,22 | 06.09.22 | 1).திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 1.57% குறைவு<br><br>2).தி/ள்.ஆர்.ஆர். எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 27.04% அதிகம் | திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 1.57% குறைவு |
| 40 | மேற்கு மண்டலம் வார்டு எண்.39–க்குட்பட்ட அஜ்ஜனூர் மாநகராட்சி ஆரம்பப்பள்ளி வளாகத்தில் புதிய வகுப்பறை கட்டிடம், மாணவ மாணவியருக்கான கழிப்பறை கட்டுதல். ந.க.எண்.4405/2022/எம்டி5 | 26.00 | ந.நி.இஅ செயல் முறை ஆணை நாள். 03.08.22 | 06.09.22 | 1).திரு. பி.எம்.மாரிமுத்து மதிப்பீட்டை விட 0.11% குறைவு<br><br>2).தி/ள்.அம்மன் பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 1.57% அதிகம் | திரு. பி.எம்.மாரிமுத்து மதிப்பீட்டை விட 0.11% குறைவு |
| 41 | மத்திய மண்டலம் வார்டு எண்.81–க்குட்பட்ட ஒக்கிலியர் காலனியில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுதல். ந.க.எண்.4406/2022/எம்டி5 | 28.00 | ந.நி.இஅ செயல் முறை ஆணை நாள். 03.08.22 | 06.09.22 | 1).தி/ள்.எ.பி,ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.02% அதிகம்<br><br>2).திரு.எஸ்.ராஜூ மதிப்பீட்டை விட 0.02% குறைவு | திரு.எஸ்.ராஜூ மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 42 | மத்திய மண்டலம், வார்டு எண்.82–க்குட்பட்ட கோட்டை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் முதல் தளத்தில் வகுப்பறைகள் கட்டுதல். ந.க.எண்.1581/22/எம்.டி.5 | 38.04 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு.ந.க.எண். 28244–25/2021/பி2 நாள். 17.05.22 | இரண்டாம் அழைப்பு 26.07.22 | திரு. கே. கோவிந்தராஜ் 0.08 % **குறைவு** | திரு. கே.கோவிந்தராஜ் 0.08 % **குறைவு** |
| 43 | கிழக்கு மண்டலம் வார்டு எண்.53–க்குட்பட்ட மசக்காளி பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டுதல். ந.க.எண்.5505/22/எம்.டி.5 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 06.10.22 | முதலாம் அழைப்பு 28.10.22 | 1).திருமதி. கே.பங்கஜம் மதிப்பீட்டை விட 4.31% குறைவு<br><br>2).தி/ள். என்.பி.கே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.23% குறைவு | தி/ள். என்.பி.கே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.23% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 44 | கிழக்கு மண்டலம் - வார்டு எண்.60–க்குட்பட்ட வரதராஜபுரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளியில் உள்ள கழிப்பறைகளை பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல் பணி. ந.க.எண்:5452/22/எம்.டி.5 | 27.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 06.10.22 | முதலாம் அழைப்பு 28.10.22 | 1).தி/ள். ஜெயலட்சுமி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.06% குறைவு | தி/ள். ஜெயலட்சுமி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| 45 | கிழக்கு மண்டலம் - வார்டு எண்.54–க்குட்பட்ட நீலிக்கோணம் பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பராமரித்தல் பணி. ந.க.எண்.5450/22/எம்.டி.5 | 19.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 06.10.22 | முதலாம் அழைப்பு 28.10.22 | 1).தி/ள். திருமூர்த்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.32% குறைவு | தி/ள். திருமூர்த்தி கன்ஸ்ட்ரக்சன் ஸ் மதிப்பீட்டை விட 0.32% குறைவு |
| 46 | கிழக்கு மண்டலம் - வார்டு எண்.22–க்குட்பட்ட வி.ஐ.பி. நகர் மற்றும் இந்து நகர் பூங்கா சைட்டில் மேம்பாட்டு பணிகள் செய்தல் . ந.க.எண்:5453/22/எம்.டி.5 | 11.50 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 06.10.22 | முதலாம் அழைப்பு 28.10.22 | 1).திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.43% குறைவு | திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.43% குறைவு |
| 47 | தெற்கு மண்டலம் - வார்டு எண்.86–க்குட்பட்ட புல்லுக்கா டு பகுதியிலுள்ள ஹவுசிங் யூனிட் பூங்காவில் நடைபாதை சுற்றுச்சுவர் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் பணி ந.க.எண்:5455/22/எம்.டி.5 | 15.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 07.10.22 | முதலாம் அழைப்பு 28.10.22 | 1).திருமதி. எஸ்.ராசாத்தி மதிப்பீட்டை விட 0.07% குறைவு | திருமதி. எஸ்.ராசாத்தி மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| 48 | தெற்கு மண்டலம் - வார்டு எண்.97–க்குட்பட்ட கே.வி.கே மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு கழிப்பறைகள் கட்டுதல் பணி ந.க.எண்:5451/2022/எம்.டி.5 | 8.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 07.10.22 | முதலாம் அழைப்பு 28.10.22 | 1).திரு.எம். ராமராஜ் மதிப்பீட்டை விட 0.02% குறைவு | திரு.எம். ராமராஜ் மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 49 | கிழக்கு மண்டலம் - வார்டு எண்.23–க்குட்பட்ட பாரிஸ் நகர் பகுதியில் மழைநீர் மற்றும் சிறு பாலம் கட்டுதல். ந.க.எண்:5454/22/எம்.டி.5 | 13.20 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 06.10.22 | முதலாம் அழைப்பு 28.10.22 | 1).தி/ள்.பாட் எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 0.02% குறைவு | தி/ள்.பாட் எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 50 | கிழக்கு மண்டலம் வார்டு எண்.53–க்குட்பட்ட மசக்காளி பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டுதல். ந.க.எண்.5067/22/எம்.டி.5 | 74.80 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 17.09.22 | முதலாம் அழைப்பு 12.10.22 | 1).தி/ள். என்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 0.04% குறைவு | தி/ள். என்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| 51 | வடக்கு மண்டலம் வார்டு எண்.28–க்குட்பட்ட சோபா நகர் கிருஷ்ணராயபுரம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியின் முதல் தளத்தில் உள்ள வகுப்பறைகளின் மேற்கூரையை பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல். ந.க.எண்.1973/2022/எம்டி5 | 5.50 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 17.09.22 | முதலாம் அழைப்பு 12.10.22 | 1).தி/ள்.பூஜா இன்ஜினியரிங் மதிப்பீட்டை விட 14.19% குறைவு 2).தி/ள்.எம்.ஜெ. இன்ப்ரா ஸ்ட்ரக்சர் பி.லிட் மதிப்பீட்டை விட 0.004% குறைவு | தி/ள்.எம்.ஜெ. இன்ப்ரா ஸ்ட்ரக்சர் பி.லிட் மதிப்பீட்டை விட 0.004% குறைவு |
| 52 | வடக்கு மண்டலம் வார்டு எண்.11–க்குட்பட்ட சிவானந்தபுரம் பகுதியிலுள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளி (காட்டு பள்ளிக்கூடம்) மேற்கூரை ஓடுகளை மாற்றி ஆர்.சி.சி மேற்கூரையாக பணி மேற்கொள்ளுதல். ந.க.எண்1969/2022/எம்டி5 | 24.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 17.09.22 | முதலாம் அழைப்பு 12.10.22 | 1).தி/ள். திருமூர்த்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.17% குறைவு 2).திரு. பி.இளங்கோ மதிப்பீட்டை விட 6.76% குறைவு | திரு. பி.இளங்கோ மதிப்பீட்டை விட 6.76% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 53 | தெற்கு மண்டலம் வார்டு எண்.87–க்குட்பட்ட அன்பு நகர் பகுதியில் சாலையின் பக்கவாட்டில் திறந்தவெளி மழைநீர் வடிகால் கட்டும் பணி. ந.க.எண்5066/2022/எம்டி5 | 8.20 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 17.09.22 | முதலாம் அழைப்பு 12.10.22 | 1).தி/ள்.ஏ.பி.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 1.00% குறைவு 2).திரு. எம்.ராம்ராஜ் மதிப்பீட்டை விட 1.07% குறைவு 3).திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட 1.17% குறைவு | திரு. எம்.ராம்ராஜ் மதிப்பீட்டை விட 1.07% குறைவு |
| 54 | மேற்கு மண்டலம் வார்டு எண்.72–க்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மலர் அங்காடிக்கு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். ந.க.எண்5064/2022/எம்டி5 | 99.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 17.09.22 | முதலாம் அழைப்பு 12.10.22 | 1).தி/ள்.துளசி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 2.49% அதிகம் 2).தி/ள்.செல்வமது டெவலப்பர்ஸ் பி.லிட் மதிப்பீட்டை விட 0.61% குறைவு | தி/ள்.செல்வமது டெவலப்பர்ஸ் பி.லிட் மதிப்பீட்டை விட 0.61% குறைவு |
| 55 | மேற்கு மண்டலம் வார்டு எண்.72–க்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மலர் அங்காடிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல். ந.க.எண்5065/2022/எம்டி5 | 21.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 17.09.22 | முதலாம் அழைப்பு 12.10.22 | 1).தி/ள்.துளசி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.44% அதிகம் 2).தி/ள்.செல்வமது டெவலப்பர்ஸ் பிலிட் மதிப்பீட்டை விட 0.43% குறைவு | தி/ள்.செல்வமது டெவலப்பர்ஸ் பி.லிட் மதிப்பீட்டை விட 0.43% குறைவு |
| 56 | கிழக்கு மண்டலம் வார்டு எண்.05–க்குட்பட்ட ரெவென்யூ நகர் பூங்காவிற்கு கம்பி வேலி அமைத்தல். ந.க.எண்.4200/2022/எம்டி5 | 2.55 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 17.09.22 | முதலாம் அழைப்பு 12.10.22 | 1).தி/ள்.பூஜா இன்ஜினியரிங் மதிப்பீட்டை விட 0.07% குறைவு 2).தி/ள்.எம்.ஜெ. இன்ப்ரா ஸ்ட்ரக்சர் பி.லிட் மதிப்பீட்டை விட 8.01% அதிகம் | தி/ள்.பூஜா இன்ஜினியரிங் மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| 57 | மேற்கு மண்டலம் வார்டு எண்.72–க்குட்பட்ட மாநகராட்சி காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் பள்ளியில் உயிரியல் மற்றும் கணினி ஆய்வுக்கூடம் கட்டுதல் நிர்வாக அறைகளுக்கு கூடுதல் மேம்பாட்டு பணிகள செய்தல். ந.க.எண்.5068/2022/எம்டி5 | 44.50 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 17.09.22 | முதலாம் அழைப்பு 12.10.22 | 1).திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 0.11% குறைவு 2).தி/ள்.பி.ஏ.டி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 1.02% குறைவு | திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 0.11% குறைவு |
| 58 | வடக்கு மண்டலம் வார்டு எண்.21–க்குட்பட்ட திருவள்ளுவர் வீதி பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை சக்தி சாலை (மாரியம்மன் கோவில் முதல் சிவானந்தபுரம் முதல் வீதி வரை) மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் கட்டுதல். ந.க.எண்.5477/2022/எம்டி5 | 54.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 17.09.22 | முதலாம் அழைப்பு 12.10.22 | 1).தி/ள். என்.எஸ்.பி அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.18% அதிகம் 2).தி/ள்.ஸ்ரீ எஸ்.பி.எஸ் அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.93% குறைவு | தி/ள்.ஸ்ரீ எஸ்.பி.எஸ் அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.93% குறைவு |
| 59 | மேற்கு மண்டலம் வார்டு எண்.43–க்குட்பட்ட தடாகம் பிரதான சாலை மேற்கு பகுதியில் வெங்கடசாமி வீதி அருகில் பழுதான மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல். ந.க.எண்.3697/2022/எம்டி2 | 6.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 17.09.22 | முதலாம் அழைப்பு 12.10.22 | 1).திரு.எம்.ராம்ராஜ் மதிப்பீட்டை விட 0.03% குறைவு 2).தி/ள். ஜெயலட்சுமி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.18% குறைவு | திரு.எம்.ராம்ராஜ் மதிப்பீட்டை விட 0.03% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 60 | வடக்கு மண்டலம் வார்டு எண்.26–க்குட்பட்ட பயனீர் மில் சாலையில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுதல். ந.க.எண்.1970/2022/எம்டி2 | 75.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு. நாள். 03.08.22 | முதலாம் அழைப்பு 06.09.22 | 1).திருமதி, கே.பங்கஜம் மதிப்பீட்டை விட 5.59% அதிகம் 2).தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.78% குறைவு 3).திரு. கே.ராமசாமி மதிப்பீட்டை விட 1.93% குறைவு | திரு. கே.ராமசாமி மதிப்பீட்டை விட 1.93% குறைவு |
| 61 | மத்திய மண்டலம் வார்டு எண்.51–க்குட்பட்ட பாரதிபுரம் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல், ந.க.எண்.4404/22/எம்.டி.5 | 40.00 | மா.ஆ.உ. நாள். 26.02.21 | முதலாம் அழைப்பு 06.09.22 | 1).திரு. ஆர்.தனபால் மதிப்பீட்டை விட 0.08% குறைவு 2).தி/ள். ஜெயலட்சுமி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.05% குறைவு | திரு. ஆர்.தனபால் மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| 62 | வடக்கு மண்டலம் – வார்டு எண்.19–க்குட்பட்ட மணியகாரம்பாளையம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கூட்ட அரங்கு கட்டுதல். ந.க.எண்.1952/22/எம்.டி.5 | 83.00 | ந.நி.கு.வ. செ.மு. ஆணை நாள். 03.08.22 | முதலாம் அழைப்பு 06.09.22 | 1).திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 0.11% குறைவு தி/ள்.பி.ஏ.டி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 1.00% குறைவு | திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 0.11% குறைவு |
| 63 | வடக்கு மண்டலம்–வார்டு எண்.20–க்குட்பட்ட மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கிருஷ்ணராயபுரம் வளாகத்தில் சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை கட்டுதல். ந.க.எண்.1954/22/எம்.டி.5 | 18.00 | ந.நி.இஅ செயல் முறை ஆணை நாள். 03.08.22 | முதலாம் அழைப்பு 06.09.22 | 1).தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 2.29% குறைவு 2).திருமதி. கே.பங்கஜம் மதிப்பீட்டை விட 3.49% அதிகம் | தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 2.29% குறைவு |
| பாராளுமன்ற உறுப்பினர் நிதி –2021–2022 | | | | | | |
| 64 | கிழக்கு மண்டலம் வார்டு எண்.9–க்குட்பட்ட காந்தி வீதியில் (S.F.No.592 நத்தம்) பொது விநியோக கடை கட்டுதல். ந.க.எண்.3589/2022/எம்டி5 | 20.00 | மா.ஆ.உ. நாள். 15.07.22 | முதலாம் அழைப்பு 09.09.22 | 1).திரு. டி.விஜயகுமார் மதிப்பீட்டை விட 2.61% குறைவு 2).திரு. எம்.பெருமாள் மதிப்பீட்டை விட 4.81% குறைவு | திரு. எம்.பெருமாள் மதிப்பீட்டை விட 4.81% குறைவு |
| 65 | மத்திய மண்டலம் வார்டு எண்.31–க்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜபுரம் பகுதியில் பொது விநியோக கடை கட்டுதல். ந.க.எண்.3588/2022/எம்டி5 | 20.00 | மா.ஆ.உ. நாள். 15.07.22 | முதலாம் அழைப்பு 09.09.22 | 1).திரு. ஆர்.செல்வராஜ் (தில்லை நகர்) மதிப்பீட்டை விட 1.90% குறைவு 2).திரு. டி.விஜயகுமார் மதிப்பீட்டை விட 1.41% குறைவு 3).திரு. எம்.பெருமாள் மதிப்பீட்டை விட 4.90% குறைவு 4).திரு. ஆர்.தங்கவேல் மதிப்பீட்டை விட 0.20% குறைவு | திரு. எம்.பெருமாள் மதிப்பீட்டை விட 4.90% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 66 | வடக்கு மண்டலம் வார்டு எண்.3–க்குட்பட்ட கே.என்.ஜி புதூர் மாநகராட்சி ஆரம்ப பள்ளி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல். ந.க.எண்.2128/2022/எம்.டி.5 | 13.50 | மா.ஆ நாள். 28.04.22 | முதலாம் அழைப்பு 21.06.22 | 1).திரு.பி.எம். மாரிமுத்து மதிப்பீட்டை விட 3.17% குறைவு 2).தி/ள்.அம்மன் பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.42% குறைவு | திரு.பி.எம். மாரிமுத்து மதிப்பீட்டை விட 3.17% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் உள்ள பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதனை மாமன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மாமன்றம் பதிவு செய்யலாம் ந.க.எண். 2121/2022/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 320 நாள் 29.12.2022**

பதிவு செய்யப்பட்டது. வரிசை எண் 1-இல் குறிப்பிட்டுள்ள வார்டு எண் 81 என்பதற்குப் பதிலாக 80 என திருத்தம் செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் : நீதிமன்ற வழக்குகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – சென்னை உயர் நீதிமன்ற மாநகராட்சி நிலை வழக்கறிஞர்கள் நியமனம் செய்ததற்கும் மாதாந்திர கட்டணம் வழங்குவதற்கும் வழக்கு கட்டணம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டுவது – தொடர்பாக.

பார்வை :

1. திரு. நஜீப் உஸ்மான் கான், B.A., B.L., அவர்களின் கடிதம் நாள் 15-07-2022.
2. ஆணையர் அவர்களின் இதே எண்ணிடப்பட்ட செயல்முறைகள் ஆணை நாள் 04-08-2022
3. திரு. N. உமாபதி, M.A., M.L., அவர்களின் மின் அஞ்சல் வழி விண்ணப்பம் பெறப்பட்ட நாள் 27-09-2022.
4. திரு.N.வேல்முருகன், B.A., B.L. அவர்களின் மின் அஞ்சல் வழி விண்ணப்பம் பெறப்பட்ட நாள் 27-9-2022.
5. திரு. D. பெர்டினன்டு, B.A., M.L. அவர்களின் மின் அஞ்சல் வழி விண்ணப்பம் பெறப்பட்ட நாள் 27-9-2022.
6. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் 14-10-2022.
7. ஆணையர் அவர்களின் இதே எண்ணிடப்பட்ட செயல்முறைகள் ஆணை நாள் 14-10-2022.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சியின் சென்னை உயர் நீதிமன்ற நிலை வழக்கறிஞர்களாக ஐந்து வழக்கறிஞர்கள் 1. திரு. R. சிவகுமார், 2. திரு. J. சத்ய நாராயண பிரசாத் 3. திரு. K. மகேஷ் 4. திரு. S. சரவணன் 5. திரு. K. நடராஜன் ஆகியோர் பணியாற்றி வந்தனர். கடந்த 25-08-2021 அன்று திரு. சிவகுமார் அவர்கள் விடுவிக்கப்பட்டதையடுத்தும் திரு. J. சத்ய நாராயண பிரசாத் அவர்கள் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக அக்டோபர் 2021 இல் நியமனம் செய்யப்பட்டதையடுத்தும் இரண்டு பணியிடங்கள் காலியாக அமைந்தன. அவ்விருவர்களுக்கு பதிலாக யாரையும் நியமிக்காத நிலையில், திரு. K. நடராஜன் அவர்கள் சொந்த காரணங்களுக்காக பணியிலிருந்து இராஜினாமா செய்ததையடுத்து, திரு. நஜிப் உஸ்மான் கான், வழக்கறிஞர் அவர்களை மாண்புமிகு மேயர் அவர்கள் ஒப்புதலுடன் பார்வை 2-இல் காண் 04-08-2022 தேதிய உத்தரவின்படி நியமித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்ற மாநகராட்சி நிலை வழக்கறிஞராக பணிபுரிந்து வந்த திரு. S. சரவணன் அவர்கள் எதிர்பாராத விதமாக கடந்த 11-9-2022 அன்று காலமாகிவிட்டார். நிர்வாக காரணங்களுக்காக திரு. K. மகேஷ், வழக்கறிஞரும், 12-10-2022 அன்று மாநகராட்சி நிலை வழக்கறிஞர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

பார்வை 3முதல் 5வரை கண்டுள்ள வழக்கறிஞர்களிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்களை கவனமாக பரிசீலித்ததில், அரசு, தனியார் என பல்வேறு துறை சார்ந்த உரிமையியல் மற்றும்குற்றவியல் வழக்குகளை நடத்திய அனுபவம் பெற்றுள்ளவர்களாக தெரியவருகிறது.

ஆகவே, பார்வை 6இல் காண் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன், பார்வை 7 இல் காண் ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி, திரு. N. உமாபதி, M.A., M.L., (Enrl. Ms. No. 1580/ 1999), திரு. N. வேல்முருகன், B.A., B.L., (Enrl. Ms. No. 1210/ 1999) மற்றும் திரு. D. பெர்டினன்டு, B.A., M.L. (Enrl. Ms. No. 1590/ 1999) ஆகிய மூன்று வழக்கறிஞர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தின் மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, அவசர அவசியம் அடிப்படையிலும், மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி அடிப்படையிலும் மேற்காண் நான்கு வழக்கறிஞர்களை, சென்னை உயர் நீதிமன்றத்திற்கான கோயம்புத்தூர் மாநகராட்சியின் நிலை வழக்கறிஞர்களாக நியமனம் செய்ததற்கும், அவர்கள் மாநகராட்சியில் சேர்ந்து பொறுப்பேற்று கொண்ட நாள் முதல் மாதாந்திர கட்டணத்தொகை (Retainer Fee) வழங்குவதற்கும், மாமன்றத் தீர்மானம் எண். 157 நாள் 29-12-2009 இன்படி அவர்களுக்கு வழக்குக் கட்டணம் வழங்கவும் மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் . ந.க.எண். 10439/ 2009/ எம்.சி. 10

**மாநகர மன்ற தீர்மானம் எண் 321 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுக் கணக்குப் பிரிவு – ஒப்பந்ததாரர்களின் வைப்புத் தொகை (Earnest Money Deposit), கூடுதல் டேவணித் தொகை (Security Deposit) மற்றும் ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் நிறுத்தி வைக்கப்பட்டத் தொகை (5% Withheld Amount) – காலாவதியானது – திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை: 1.அரசாணை எண்.MS.No.621 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள். 08.04.1980,
2. கணக்குகள்குழு தீர்மான எண் 3 நாள். 21.09.2022

------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் பல்வேறு திட்டப்பணிகள் ஒப்பந்தாரர்கள் மூலம் மேற் கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பெற்று அதற்குண்டான செலவினப்பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் தொகையினை திரும்ப வழங்க கோப்புகள் பெறப்பட்டுள்ளது. மேலும் அப்பணிகளுக்காக செலுத்தப்பட்டுள்ள வைப்புத் தொகை மற்றும் கூடுதல் டேவணித் தொகை (Security Deposit) திரும்ப வழங்க பட்டியல்கள் பெறப்பட்டுள்ளது.

மாநகராட்சி விதிகளின்படி கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்றி மேற்படி தொகைகளை வழங்க இயலும்.

| வ.எண். | விபரம் | விதிகள் |
|---|---|---|
| 1. | Withheld Amount (செலவினப் பட்டியலில் 5% பிடித்தம் செய்து வைக்கப்பட்டத் தொகை) | 1. தணிக்கைத் துறையினரால் தணிக்கைத் தடை ஏதுமில்லை என்பதற்கான சான்றொப்பம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>2. பணிகள் முடிந்து 6 மாத காலம் முடிவுற்று இருக்க வேண்டும். மேலும் 3 வருடங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 2. | EMD / Security Deposit (மதிப்பீட்டுத் தொகையில் 1% வைப்புத் தொகை மற்றும் 1% கூடுதல் வைப்புத் தொகை) | வைப்புத் தொகைப் பெறப்பட்ட நாளிலிருந்து 3 வருடங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

பார்வையில் காணும் அரசாணையில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Claims for the refund of lapsed revenue deposits of Municipalities, preferred after 6 years from the date of lapse of the deposits shall not be entertained, and that the period of preservations “Register of lapsed deposits” (M.F.184) which at present is 5 years shall be revised as 8 years.

மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளவாறு காலாவதியான தேதியிலிருந்து **6** ஆண்டுகளுக்குள் மேற்படி பிடித்தம் செய்யப்பட்டத் தொகை *EMD / Security Deposit ஆகியவற்றை வழங்க இயலும். Para 86-7 & 86-8 of the Municipal Manual volume I* ன்படி மேற்படித் தொகைகளை திரும்ப வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும். எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள ஒப்பந்ததாரர்களின் வைப்புத் தொகை (Earnest Money Deposit), கூடுதல் டேவணித் தொகை (Security Deposit) மற்றும் பட்டியலில் நிறுத்திவைக்கப்பட்ட தொகை (5% Withheld Amount) ஆகியவைகள் காலாவதியானதால் *"காலாவதி பதிவேட்டிற்கு"* கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி காலாவதியான தொகைகளை ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க கணக்குகள் குழுவின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டதில் கணக்குகள்குழு தீர்மான எண்.**3** நாள் **21.09.2022**–ல் அலுவலக குறிப்பை அனுமதித்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே, மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது **(அட்டவணை I வரிசை எண். 1 முதல் 335 அட்டவணை II வரிசை எண். 1 முதல் 54) இத்துடன் இணைக்கப்பட்டுள்து).**

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.**2282 /2022 /** பி**15**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 322 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.83 வ.உ.சி பூங்கா நுழைவு கட்டணம் மற்றும் சிறுவர் பூங்கா நுழைவு கட்டணம் வசூல் செய்தல் - கட்டணங்கள் மறு நிர்ணயம் செய்தல் - அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.83 வ.உ.சி பூங்கா மிருகக்காட்சி சாலை மற்றும் சிறுவர் பூங்கா நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகைதாரர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு வருகிறது. மேற்படி இனத்திற்கு கொரோனா நோய் தொற்று காரணமாக அரசால் திறக்க அனுமதி வழங்கப்படாததால் வ.உ.சி பூங்கா மிருகக்காட்சி சாலை மற்றும் சிறுவர் பூங்கா நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் தற்காலிகமாக பொது மக்கள் நுழைய தடைவிதிக்கப்பட்டு மூடிவைக்கப்பட்டது.

அரசால் தளர்வுகள் அறிவிக்கப்பட்ட பின் வார்டு எண்.83 வ.உ.சி பூங்கா மிருகக்காட்சி சாலை மற்றும் சிறுவர் பூங்கா நுழைவு கட்டணம் வசூலிக்கும் இனங்களில் 23.08.2021 முதல் வ.உ.சி பூங்கா மிருகக்காட்சி சாலைக்கு மட்டும் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் கட்டமைப்பு வசதிகள், பராமரிப்பு பணிகள் போன்ற காரணங்களுக்காக வ.உ.சி உயிரியல் பூங்காவுக்கான அங்கீகாரத்தினை மத்திய உயிரியல் பூங்கா ஆணையம் ரத்து செய்த காரணத்தினால் இவ்வினம் பொதுமக்கள் பார்வையிடுவதை தடை செய்து தற்போது மூடி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போது கொரோனா நோய் தொற்று கட்டுப்பாடுகள் தளர்வு செய்யப்பட்டு பொதுமக்கள் அதிக அளவில் வருவதால் மாநகராட்சிக்கு வருவாய் பெருக்கும் நோக்கில் வ.உ.சி சிறுவர் பூங்கா நுழைவு கட்டணம் வசூலிக்கும் பணியினை ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணம் விகித அடிப்படையில் 02.04.2022 முதல் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு துறை மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. வ.உ.சி சிறுவர் பூங்காவிற்கு வார விடுமுறை நாட்களில் சனிக்கிழமை அன்று 1034 நபர்களும், ஞாயிற்றுக்கிழமை அன்று 1916 நபர்களும் சராசரியாக வந்துள்ளனர். இதர நாட்களில் பொது மக்களின் வருகை 250க்கும் குறைவாக வருகை புரிகின்றனர்.

மேலும் வ.உ.சி சிறுவர் பூங்காவிற்கு வரும் பொது மக்களிடம் நுழைவுக்கட்டணம் கீழ்கண்டவாறு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

சிறியவர்களுக்கு - ரூ.2/- பெரியவர்களுக்கு - ரூ.3/-

மேற்காண் நுழைவு கட்டணத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆனதாலும் பராமரிப்பு செலவினங்கள் மற்றும் விளம்பர செலவினங்கள் அதிகபடியாக இருப்பதாலும் தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் நுழைவு கட்டண விகிதங்களை கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கலாம்.

சிறியவர்களுக்கு - ரூ.5/-    பெரியவர்களுக்கு - ரூ.10/-

அதற்கான கட்டண ரசீதுகளை அச்சிடவும் அதற்கான செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டத்தில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட தீர்மான எண். 56 நாள்.10.10.2022-ன் படி அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்    ந.க. எண்.3489/2021/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 323 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் 81-வது வார்டில் தூய்மை பணியாளர் திரு.C.ஆறுமுகம் என்பவர் 24.12.2012 முதல் பணிபுரிந்து வருகிறார். பார்வையில் காணும் கடிதத்தில் தனது பெயரில் பேரூர் தாலுக்கா, தீத்திபாளையம் கிராமம் க.ச.189/1 நெ.கா.பு.ஏ 5.01, க.ச.188/3 நெ.கா.பு.ஏ 0.68 ஆக இரு காலைகளுக்கும் ஒட்டு பு.ஏ.5.69-ல் 1193-1/4 சதுரடி அல்லது 2 செண்ட் 322 சதுரடிகள் விஸ்தீரணமுள்ள பூமியை மனையிடங்களாகப் பிரித்து L.P.D.T.PNo.1491/92 பத்திரம் எண்.5110 என்ற எண்ணாக அரசு அங்கீகாரம் பெற்ற பிளானில் கண்ட சயிட் எண்.34-ல் மேல்புறம் இருந்த ஓட்டு வீட்டை வாங்கி, இடித்துவிட்டு கான்கிரீட் வீடு கட்ட நிர்வாக அனுமதி வழங்குமாறு விண்ணப்பத்தில் கோரியுள்ளார். மேற்படி குடியிருப்பு கட்டிடம் கட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20,00,000/- இலட்சம் ஆகும் என தெரிவித்துள்ளார்.

மேலும், கட்டிடம் கட்ட முன்பண திட்டத்தின் கீழ் தொகை பெறுவதற்கு மூலப்பத்திர நகல், வில்லங்கச்சான்று நகல் (EC), வழக்கறிஞரின் ஒப்புதல் சான்று நகல், மதிப்பீட்டு நகல், பொறியாளர் அறிக்கை நகல் மற்றும் சம்பள சான்று ஆகியவற்றை இணைத்துள்ளார்.

மேற்படியாருக்கு கட்டிடம் கட்ட முன்பணம் திட்டத்தின் கீழ் தொகை பெற பணியாளரின் விபரம் கீழ்வருமாறு.

| | | |
|---|---|---|
| பணியில் சேர்ந்த நாள் | : | 24.12.2012 |
| ஓய்வு பெறும் நாள் | : | 31.12.2038 |
| பணிக்காலம் | : | 16 ஆண்டுகள் 8 மாதங்கள் உள்ளது. |
| தற்போது பெற்று வரும் அடிப்படை ஊதியம் | : | 20500/- |
| அகவிலைப்படி | : | 6355/- |
| **மொத்தம்** | : | **26855/-** |
| அன்னாருக்கு 16 ஆண்டு பணிக்காலம் உள்ளதால், இவருக்கு வழங்குவதற்கு தகுதியான தொகை | : | 26855 X 90 = 24,16,950/-<br>$\frac{24,16,950 \times 16}{20}$ = **19,33,560/-** |

எனவே, மேற்படி மனையிடத்தில் வீடு கட்டுவதற்கு, வீடு கட்டும் முன்பணத் தொகை திட்டத்தின் கீழ் ரூ.19,33,560/- கடனுதவி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம்    ந.க.எண். 2471/2021/இ4(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 324 நாள் 29.12.2022**

பொருளில் குறிப்பிட்டுள்ள வார்டு எண் 81 என்பதற்குப் பதிலாக 82 என திருத்தம் செய்து பொருள் அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 17

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - வார்டு எண் 86க்குட்பட்ட பகுதிகளில் பயன்பாட்டில் இருந்த வழிபாட்டுத்தல குடிநீர் குழாய் இணைப்புகள் துண்டிப்பு செய்யப்பட்டது. நிர்வாக நலன் கருதி பயன்பாட்டில் உள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு குடிநீர் குழாய் வழங்கும் பொருட்டு குடிநீர் வீட்டிணைப்பிற்கான - அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்பிருந்த (2011க்கு முன்) மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக அமைப்பினை அபிவிருத்தி மற்றும் சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு 24 மணி நேரமும் சீரான அழுத்தத்துடன் குடிநீர் விநியோகம் செய்யும் பணியினை, தி/ள் சூயஸ் பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு திட்ட பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது. ஓப்பந்தப்படி மாநகராட்சியில் உள்ள அனைத்து குடிநீர் இணைப்புகளும் புதுப்பிக்கும் பணி மேற்படி ஒப்பந்தத்தாரரையே சார்ந்ததாகும்.

தற்பொழுது வார்டு எண்.86 பகுதிகளில் 13 எண்ணிக்கையில் வழிபாட்டுத்தலங்களுக்கு ஏற்கெனவே குடிநீர் குழாய் இணைப்புகள் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**குடிநீர் இணைப்பு உள்ள வழிபாட்டுத்தலங்களின் விபரம்**

| வ.எண் | வழிபாட்டுத்தலங்களின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | இர்ஷாதுல் முஸ்லிமீன் ஷாபியா சுன்னத் ஜமாத். புல்லுக்காடு |
| 2 | தவ்ஹீத் ஜமாத், பிலால் நகர் |
| 3 | மஸ்ஜிதுல் ஷாலிஹீன், அல் அமீன் காலனி 1-வது வீதி |
| 4 | மஸ்ஜிதுர் ரஹ்மான், அல் அமீன் காலனி 3-வது வீதி |
| 5 | மஸ்ஜித் ஆயிஷா, அண்ணா நகர் |
| 6 | பத்ஹுல் இஸ்லாம் சுன்னத் ஜமாத், லாரி பேட்டை பழைய மார்க்கெட் |
| 7 | ஃபௌஸுல் இஸ்லாம் ஹனபி சுன்னத் ஜமாத், ஆசாத் நகர் |
| 8 | மஸ்ஜிதே மதனிய்யா, சேரன் நகர் |
| 9 | கரும்புக்கடை சுன்னத் ஜமாத் , பள்ளி வீதி |
| 10 | மஸ்ஜிதுல் ஹுதா, சாரமேடு மெயின் ரோடு |
| 11 | அல் மஸ்ஜிதுல் முஃமினீன் ,பொன்விழா நகர் |
| 12 | அல் அமீன் ஹனபி சுன்னத் ஜமாத் ,அல் அமீன் காலனி 1- வீதி |
| 13 | தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் , MCR நகர் 3-வது வீதி |

மேலும் கீழ்கண்ட மூன்று இணைப்புகள் 24x7 குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் புதிதாக குடிநீர் விநியோக குழாய் அமைக்கும் பணி நடைபெற்றப்போது ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்த சிதிலமடைந்த பழைய குடிநீர் விநியோக குழாயை துண்டிப்பு செய்து உள்ளார்கள். இதனால் கீழ்கண்ட இம்முன்று வழிபாட்டுத்தலங்களுக்கு குடிநீர் பெறப்படவில்லை.

**குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டு உள்ள வழிபாட்டுத்தலங்களின் விபரம்**

| வ.எண் | வழிபாட்டுத்தலங்களின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 14 | மஸ்ஜிதுல் ஜன்னத், பிலால் எஸ்டேட் |
| 15 | பத்ருல் இஸ்லாம் ஹனபி சுன்னத் ஜமாத் ,MCR நகர் 1-வது வீதி |
| 16 | ஷம்சுல் இஸ்லாம் ஹனஃபி சுன்னத் ஜமாத் , திப்பு நகர் |

மேற்கண்ட 16 குடிநீர் குழாய் இணைப்புகளுக்கும் நாளது வரை எவ்வித குடிநீர் கட்டணமும் மாநகராட்சிக்கு செலுத்தப்படவில்லை. இதனால் மாகராட்சிக்கு வருடத்திற்கு தோராயமாக ரூ37,248/-வருமானம் இழப்பு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட 16 வழிபாட்டுத் தலங்களுக்கு பயன்பாட்டில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகளை கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் விநியோக துணை விதிகள்படி வீட்டு இணைப்புகளாக மாற்றி அமைக்க அனுமதி வேண்டப்படுகிறது. வீட்டு இணைப்புகளாக முறைப்படுத்தப்பட்டப்பின் தொடர்ந்து குடிநீர் கட்டணத் தொகை மாநகராட்சிக்கு பெறப்பட்டு மாநகராட்சிக்கு வருவாய் அதிகரிக்கும்.

<u>குடிநீர் இணைப்பு இல்லாமல் உள்ள வழிபாட்டுத்தலங்களின் விபரம்</u>

| வ.எண் | வழிபாட்டுத்தலத்தின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 17 | மஸ்ஜிதுல் குத்தூஸ் ரோஸ் பார்க், அன்பு நகர் 9- வீதி |
| 18 | மஸ்ஜிதுஸ் ஸலாம் சூப்பர் கார்டன் |
| 19 | மாலிக்குல் முல்க் அன்பு நகர் 7வது வீதி |
| 20 | மதரஸத்துல்ஈமான் (YMJ), ஆசாத் நகர் 9- வது வீதி |
| 21 | மஸ்ஜிதுல் ரய்யான் ஆசாத் நகர் (INTJ) |
| 22 | மஸ்ஜிதே முஹமதிய்யா பாரத் நகர் |
| 23 | மஸ்ஜிதுல் இஹ்ஸான் , சலாமத் நகர் |
| 24 | மஸ்ஜிதுல் இஹ்லாஸ் , பூங்கா நகர் |
| 25 | மிப்தாஹுல் ஜன்னா சுன்னத் வல் ஜமாத், JK கார்டன் |
| 26 | தாருல் ஹிக்மா ட்ரஸ்ட் மஸ்ஜித், JK கார்டன் 1-வது வீதி |
| 27 | மஸ்ஜிதுல் அக்ரம் , NO. 6 அருள் நகர் 1-வது வீதி |
| 28 | மஸ்ஜிதுல் அரபா , ரோஸ் பார்க் - 4 வது வீதி, தெற்கு உக்கடம் |

மேலும் வார்டு எண் 86ல் வரிசை எண் 17 முதல் 28 வரை உள்ள மேற்கண்ட வழிபாட்டுத்தலங்களுக்கு தற்சமயம் குடிநீர் இணைப்பு இல்லை.

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். 173, நாள் 29.12.2009-ன் படி நிறைவேற்றப்பட்ட குடிநீர் விநியோக துணை விதிகளில் **<u>பக்க எண் 6-ல், வரிசை எண் 7-ல்</u>** வழிபாட்டுத் தலங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்குதல் தொடர்பாக கீழ்கண்டவாறு வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**7. பொதுமக்களால் அருந்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் அனைத்து வழிபாட்டுத் தலங்களுக்கு கொடுக்கப்படும் குழாய் இணைப்புகள் கீழ்கண்டவாறு வரைமுறைப்படுத்தப்படும்.**

(அ) வீட்டு உபபோகத்திற்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்பு விதிகளே இதற்கு பொருந்தும்.

(ஆ) அந்தந்த வழிபாட்டுத் தலங்களின் நிர்வாகப் பொறுப்பாளர்கள் மேற்படி குழாய்களை அமைக்கவும் அவைகளைப் பராமரிக்கவும் அல்லது தேவைப்படாத காலத்தில் அவற்றை நீக்கவும் ஆகும் செலவுகளை அவர்களே ஏற்க வேண்டும், மேற்படி இடங்களில் வைக்கப்படும் குழாய்கள் 15 மி.மீ விட்டமுள்ளதாகவும் நீர் வீணாகாமல் தானே மூடிக் கொள்ளும் வகையானதாக திருகு குறுங்குழாய் (வாட்டர் டேப்) பொருத்தப்பட்டு இருக்க வேண்டும்.

(இ) குடிநீர் உபயோகத்திற்கு மட்டும் குடிநீர் இலவச சலுகையின்றி குடியிருப்பு விநியோக முறையில் உபயோகித்த அளவிற்கு ஏற்ப கட்டணம் செலுத்த வேண்டும்.

(ஈ) மேற்படி வழிபாட்டுத் தலங்களின் நிர்வாகத்தால் நடத்தப்படும் கடை மற்றும் வியாபார கட்டிடங்களுக்கு வீட்டு உபயோகமில்லாத முறையில் மட்டுமே தனியே குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும்.

(உ) இந்த நிறுவனங்கள் விநியோக இணைப்புக்கான மதிப்பீட்டுத் தொகை மற்றும் வேலைகளை மேற்பார்வையிடுவதற்கான கட்டணமும் செலுத்த வேண்டும்.

எனவே, வரிசை எண் 1 முதல் 16 வரை குடிநீர் குழாய் இணைப்பு பயன்பாட்டில் உள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு வீட்டு இணைப்பாக கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் விநியோக துணை விதிகள்படி முறைப்படுத்த மாமன்ற அனுமதி வேண்டியும் வரிசை எண் 17 முதல் 28 வரை உள்ள வழிபாட்டுத் தலங்களுக்கும் இடத்தின் வகைப்பாட்டினைக் கருத்தில் கொண்டும் மேலும் சொத்துவரி இல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கும் மாமன்ற அனுமதி பெற்று குடிநீர் இணைப்பு வழங்கவும் அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 6396/2018/JN5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 325 நாள் 29.12.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

கடந்த 04.04.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் சென்னையில் நடத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டுகளிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centres) நிறுவி அவற்றில் பொதுமக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க திட்டமிட உத்தரவிட்டார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்பேரில் மேற்கு மண்டலம் வார்டு எண்.17-க்குட்பட்ட பாலாஜி நகர் பகுதியில் அமைந்துள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணிக்கு ரூ.69,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 03.01.2019 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 09.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, மாமன்றத்தில் 07.03.2019 தேதியன்று ஒப்புதல் வழங்கப்பட்டு 08.03.2019 அன்று ஒப்பந்ததாரர் தி/ள். ARESPE Infra pvt ltd., என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது.

இதனைதொடர்ந்து, பாலாஜி நகர் பகுதியில் அமைந்துள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி துவங்கி தரைதளத்தில் கூரைமட்டம் (Roof Level) வரை பணி நடைப்பெற்று வந்த நிலையில், திரு.வி.க.நகர், பாலாஜி நகர், வடவள்ளி என்ற விலாசத்தில் வசிக்கும் திரு.கார்த்திகேயன், பழனிசாமி, ஆனந்த், ராஜகோபால் மற்றும் சைலஷா ஆகியோர் பொதுமக்கள் குடியிருக்கும் குடியிருப்பு பகுதியில் குப்பை கிடங்கு அமைக்க கூடாது என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்றத்தால் பணி நிறுத்தப்பட்டது.

மேற்கண்ட, நிறுத்தப்பட்ட பணியில் தரைதளத்தில் கூரைமட்டம் (Roof Level) வரை பணிக்கான முதல் தவணை தொகை ரூ.44,40,658/-யினை ஒப்பந்ததாரர் தி/ள். ARESPE Infra pvt ltd., என்ற நிறுவனத்திற்கு 20.08.2019 தேதியன்று வழங்கப்பட்டது. மேலும், பணி நீதிமன்ற வழக்கில் உள்ளதால் மீதமுள்ள பணிகளை செய்ய இயலாது என தி/ள். ARESPE Infra pvt ltd., என்ற நிறுவனத்தார் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். உயர்நீதி மன்ற தீர்ப்பாணை W.A.No.4078/2019-ன் படி வழக்கு தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, பணியின் அவசர அவசியம் கருதி மீதமுள்ள பணிகளை செய்து மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் (MCC) உபயோகிக்கும் நிலைக்கு கொண்டு வர நடப்பு நிதியாண்டு விலைப்பட்டியல் படி ரூ.40,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக முன் அனுமதி பார்வை 1-ல் காணும், 22.07.2022- ம் தேதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தலைவர் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

இதனைதொடர்ந்து, பாலாஜி நகர் பகுதியில் அமைந்துள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணிக்கு ரூ.40,00,000/-க்கு 21.10.2022 தேதியன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில், குறைந்த விலைப்புள்ளி அளித்த தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ், நிறுவனத்தார் தேர்வு செய்யப்பட்டுள்ளார். எனவே, அரசாணை எண்.158 நாள் 02.11.2022–ன் படி ஆணையாளர் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி வேண்டியும் மாமன்றத்தின் அனுமதிக்கும், பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:**மாமன்றம் பதிவு செய்யலாம்** ந.**க.எண்**:5492/2022/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 326 நாள் 29.12.2022**

பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 19

**பொருள்.-** கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்தியமண்டலம் ,பொறியியல் பிரிவு-வார்டு எண் 83-க்குட்பட்ட நஞ்சப்பா சாலையில் உள்ள மாநகராட்சி வணிக வளாக கட்டிடத்தில் 30-கடைகள் உள்ளன. இதனால் மாநகராட்சிக்கு கிடைக்கும் ஆண்டு வருவாய் ஏறக்குறைய 61.00 இலட்சம் ஆகும். கடந்த 5-ஆண்டுகளுக்கும் மேலாக கட்டிடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளாததால் மேற்கூரைதளம் ஆங்காங்கே பழுதடைந்துள்ளது. கதவு ,ஜன்னல்கள், கழிவறைகள் பழுதடைந்துள்ளது. எனவே கட்டிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் பணியானது மிகவும் அவசியமானதாகும். எனவே வார்டு எண் 83-க்குட்பட்ட நஞ்சப்பா சாலையில் உள்ள மாநகராட்சி வணிக வளாக கட்டிடத்திற்கு மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.29,50,000-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு கூட்டபொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு.- அனுமதிக்கலாம் ந.க.எண்.-5337/2022/எம்.டி.5(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 327 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.14 -க்குட்பட்ட வெள்ளக்கிணறு பிரிவு திருவள்ளுவர் வீதியில் உள்ள பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலை திரும்ப கட்டுதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம் வார்டு எண்.14-க்குட்பட்ட வெள்ளக்கிணறு பிரிவு திருவள்ளுவர் வீதியில் உள்ள பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலை திரும்ப கட்டுதல். ந.க.எண்.3963/2022/எம்.டி.2 (எம்.டி.4) | 24.00 | ப.கு.தீ எண்.16 நாள். 22.07.22 | 09.09.22 | 1).தி/ள்.என்.எஸ்.பி அசோசியேட்ஸ் மதிப்பீட்டைவிட 0.53% குறைவு 2).தி/ள். ஸ்ரீ எஸ்.பி.எஸ். அசோசியேட்ஸ் மதிப்பீட்டைவிட 0.24% குறைவு | தி/ள்.என்.எஸ்.பி அசோசியேட்ஸ் மதிப்பீட்டைவிட 0.53% குறைவு |
| 2 | வடக்கு மண்டலம் – வார்டு எண்.11 க்குட்பட்ட சிவானந்தபுரம் 3–வது வீதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் புதுப்பித்தல் ந.க.எண். 4565/2022/எம்.டி.2 | 15.00 | மா.மே. செ.நா 12.09.2022 | 21.10.22 | 1. தி/ள்.ஸ்ரீ எஸ்பிஎஸ் அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.09 % குறைவு 2.தி/ள்.என்.எஸ்.பி அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.32 % குறைவு | தி/ள்.என்.எஸ்.பி அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.32 % குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் உள்ள பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதனை மாமன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மாமன்றம் பதிவு செய்யலாம் ந.க.எண்.3963/2022/எம்.டி.2 (எம்.டி.4)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 328 நாள் 29.12.2022**

பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 21

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| **வ எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில்** | **நிர்வாக அனுமதி நாள்** | **ஒப்பந்தப் புள்ளி நாள்** | **பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்** |
|---|---|---|---|---|---|---|
| 1 | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட சிங்காநல்லூர்- வெள்ளலூர் பிரதான சாலை பகுதியில் சிங்கை நகர் முதல் இரயில்வே பாலம் வரை பில்லூர் குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பிரதான குழாயில் இணைப்பு ஏற்படுத்துதல் பணி **ந.க.எண்.3668/2022/எம்.டி.4** | 82.00 | ம.தீ.எண்.198 நாள். 30.07.22 | இரண்டாம் அழைப்பு 12.10.2022 | தி/ள்.ஜெ.எஸ் அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட் **3.00% அதிகம்** | தி/ள்.ஜெ.எஸ் அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட் **3.00% அதிகம்** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட சிங்காநல்லூர்- வெள்ளலூர் பிரதான சாலை பகுதியில் வெள்ளலூர் அரசு மருத்துவமனை முதல் புதிய பேருந்து நிலையம் வரை (வெள்ளலூர் பஞ்சாயத்து) பில்லூர் குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பிரதான குழாயில் இணைப்பு ஏற்படுத்துதல் பணி **ந.க.எண்.3669/2022/எம்.டி.4** | **87.00** | **ம.தீ.எண்.1 99** நாள். **30.07.22** | இரண்டாம் அழைப்பு **12.10.2022** | தி/எ்.ஜெ.எஸ் அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட் **3.00% அதிகம்** | தி/எ்.ஜெ.எஸ் அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட் **3.00% அதிகம்** |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.3668/2022/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 329 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் - 2022-23 முதல் 2024-25-ம் ஆண்டிற்கான மாதந்திர வாடகை இனங்கள் 08.12.2022 அன்று பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படைப்பு செய்வது - தொடர்பாக.

பார்வை : பொது மின் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள். 08.12.2022.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், 2022-23 முதல் 2024-25 மாதந்திர வணிக வளாக இனங்களுக்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 08.12.2022-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஏலத் தொகைகள் பெறப்பட்டுள்ளன.

**1. ஏலத்தில் கலந்து கொண்டு அரசு மதிப்பை விட அதிகமாக ஏலம் கோரிய இனங்களின் விபரங்கள் (அட்டவணை 1)**

| வ. எண் | கடையின் அளவு | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை ரூ | ஏலதாரர் பெயர் | 1-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பொது ஏலம் (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1 | 100 ச.அடி | துடியலூர் வணிக வளாக கடைகள் முதல் தளம் கடை எண் 44 (வார்டு எண்.2) | ரூ.3,200/- | சூர்யராஜ். க | - | ரூ.3,800/- | ரூ.3,800/- |
| 2 | 183 ச.அடி | சரவணம்பட்டி விளாங்குறிச்சி ரோடு வணிக வளாக கடைகள் கடை எண் 1 (வார்டு எண்.10) | ரூ.5,200/- | சதீஸ்குமார் | - | ரூ.5,900/- | - |
| | | | | சோமசுந்தரம் | ரூ.5,500/- | ரூ.50,000/- | ரூ.50,000/- |
| 3 | 183 ச.அடி | சரவணம்பட்டி விளாங்குறிச்சி ரோடு வணிக வளாக கடைகள் கடை எண் 2 (வார்டு எண்.10) | ரூ.5,200/- | சௌந்தர்ராஜன் ச | - | ரூ.5,900/- | - |
| | | | | தினேஷ்குமார் | ரூ.6,000/- | ரூ.50,000/- | ரூ.50,000/- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **4** | 453 ச.அடி | சரவணம்பட்டி விளாங்குறிச்சி ரோடு வணிக வளாக கடைகள் கடை எண் 3 (வார்டு எண்.10) | ரூ.12,900/- | கோகுல் | - | ரூ.13,600/- | ரூ.13,600/- |
| **5** | 183 ச.அடி | சரவணம்பட்டி விளாங்குறிச்சி ரோடு வணிக வளாக கடைகள் கடை எண் 4 (வார்டு எண்.10) | ரூ.5,200/- | ஜெயபிரகாஷ் | - | ரூ.5,900/- | ரூ.5,900/- |
| **6** | 183 ச.அடி | சரவணம்பட்டி விளாங்குறிச்சி ரோடு வணிக வளாக கடைகள் கடை எண் 5 (வார்டு எண்.10) | ரூ.5,200/- | செல்வக்குமார் | - | ரூ.5,900/- | ரூ.5,900/- |
| **7** | 183 ச.அடி | சரவணம்பட்டி விளாங்குறிச்சி ரோடு வணிக வளாக கடைகள் கடை எண் 6 (வார்டு எண்.10) | ரூ.5,200/- | பிரபாகரன். ர | - | ரூ.5,900/- | - |
| | | | | கந்தசாமி | ரூ.6,000/- | ரூ.50,000/- | ரூ.50,000/- |
| **8** | 256 ச.அடி | வார்டு எண் 30 கணபதி மாமரத் தோட்டம் பகுதியில் உள்ள வணிக வளாகம் கடை எண் 2 | ரூ.3,305/- | அசோக்குமார் | - | ரூ.3,700/- | - |

**2. ஏலம் போகாத மாதாந்திரா வணிக வளாகக் கடைகள் (அட்டவணை 2)**

| **வ. எண்.** | **குத்தகை இனம்** |
|---|---|
| 1 | துடியலூர் வெள்ளக்கிணறு ரோடு வணிக வளாக கடைகள் கடை எண் 4 (வார்டு எண்.2) |

அட்டவணை -1ல் குறிப்பிட்டுள்ள வரிசை எண் 1,4,5,6 மற்றும் 8- ல் உள்ள கடைகளுக்கு வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி தொகையானது அரசு மதிப்பை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் மேற்காண் கடைகளுக்கு வரப்பெற்ற உயர்ந்த பட்ச கேள்வி தொகையை ஏற்று உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு அரசாணை (நிலை) எண்.92. நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007-ன் படி ஒப்படை நாள் முதல் 31.03.2025 முடிய மூன்றாண்டுக்கு கடையினை ஒப்படை செய்யவும்,

வரிசை எண் 2,3 மற்றும் 7-ல் உள்ள கடைகளுக்கு ஒப்பந்தபுள்ளியாக திரு.சோமசுந்தரம், திரு.தினேஷ்குமார் மற்றும் திரு.கந்தசாமி என்பவர்கள் ரூ.50,000 கோரியுள்ளனர். அரசு மதிப்பை காட்டிலும் ரூ.44,800- அதிகமாக கோரியுள்ளனர்.

மேலும் மேற்காண் ஏலதாரர்களின் கடிதத்தில், தாங்கள் ஏலத்தில் கலந்து கொள்வது இதுதான் முதல் முறை என்றும், மாத வாடகையாக ரூ.5900 மற்றும் ரூ.6000 எனக் குறிப்பிட வேண்டிய இடத்தில் தவறுதலாக ரூ50,000- என குறிப்பிட்டுவிட்டோம். எனவே இக்கடிதத்தை பரிசிலித்து கடை எண் 1-னை ரூ.5900-க்கு திரு.சோமசுந்தரம் என்பவருக்கும்,
கடை எண் 2 மற்றும் 6-ற்கு பொது ஏலத்தில் கேட்ட படி ரூ.6000-க்கு திரு. தினேஷ்குமார் மற்றும் திரு.கந்தசாமி என்பவர்களுக்கு வழங்கும் படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி கடைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில், தவறுதலாக வைப்புத் தொகைகள் குறிப்பிட்டுள்ளதால் அக்கடைகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நிராகரிக்கலாம்.

எனவே, வரிசை எண்.1, 4, 5, 6 மற்றும் 8 ஆகிய கடைகளுக்கு பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவும், வரிசை எண்.2, 3 மற்றும் 7 ஆகிய கடைகளுக்கு இரண்டாவது ஏலத் தொகைக்கு அனுமதித்தும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் கூட்ட தீர்மான எண்.75, நாள்.19.12.2022-ன் படி இப்பொருளினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் பரிந்துரையின்படி, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.3043/2013/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 330 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வரியில்லா இனங்கள் - வார்டு எண் 24 – ஆரோக்கியசாமி ரோடு – கடையின் வாடகை மற்றும் அளவு திருத்தம் செய்வது தொடர்பாக.

பார்வை:
1. வாடகைதாரரின் விண்ணப்ப நாள் 24.03.2022
2. வரிவசூலரின் குறிப்பு நாள் 07.04.2022 மற்றும் 07.11.2022
3. உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 26.04.2022.
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மான எண். 73 நாள் 19.12.2022.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 24-க்குட்பட்ட ஆரோக்கியசாமி ரோட்டிலுள்ள மாநகராட்சி வணிக வளாக கடை எண் 22-ன் அளவு 119 சதுரடி மட்டுமே உள்ளது எனவும் தமக்குரிய வாடகையினை திருத்தம் செய்ய உரிமம்தாரர் திரு. B.L.ராமசாமி பார்வை 1-ல் காண் மனுவில் கோரியுள்ளார். இவ்வலுவக பதிவுகளில் கடையின் அளவு 160 சதுரடி எனவும் வாடகைத்தொகை ரூ.13,500/- எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட வார்டு வரிவசூலர் பார்வை 2–ல் காண் 07.04.2022-ம் தேதிய வரிவசூலரின் குறிப்பில் சம்பந்தப்பட்ட கடை மாடிப்படியில் கீழ்புறமாக அமைந்துள்ளது எனவும் அளவீடு செய்யப்பட்டத்தில் Rcc/T/Shop 4 ½ x 4 ½ = 20
3 ½ x 17 ¼ = 60
7 ¾ x 5 = 39

119 சதுரடி மட்டுமே உள்ளது எனவும், சந்தை மதிப்பு ரூ. 4,900/- எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பார்வை 3-ல் காணும் உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி, சதுரடிக்கு ரூ.41/- வீதம், 119 சதுரடிக்கு (119 x 41 = 4,879/-) ரூ.4,879/- ஆக குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஆரோக்கியசாமி ரோடு கடை எண் 22-க்கு 119 சதுரடிக்கு ரூ.4,900/- என 01.04.2021 முதல் நிர்ணயம் செய்யலாம் என வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மான எண். 73 நாள். 19.12.2022 ல் ‘‘அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண்.3018/22/A3 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 331 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - புதிய வார்டு எண்.72 (24) - பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடை கடை எண் J-141 க்கு தவறுதலாக வாடகை உயர்த்தப்பட்டது - திருத்தி நிர்ணயம் செய்வது – தொடர்பாக.

பார்வை :
1. மாமன்ற தீர்மான எண். 364 நாள். 31.01.2013.
2. மாமன்ற தீர்மான எண். 281 நாள். 03.08.2018.
3. மாமன்ற தீர்மான எண். 563 நாள். 31.12.2021.
4. S. ஜாபர் அலி அவர்களின் விண்ணப்ப நாள். 18.10.2022.
5. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மான எண். 74 நாள் 19.12.2022

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட புதிய வார்டு எண்.72 (24) ல் மேடை கடை எண். J-141-ஐ ஏலம் மூலம் மாதவாடகை ரூ.1,065/- என்ற அடிப்படையில் S. ஜாபர் அலி என்பவருக்கு 22.02.10 முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி கடைக்கு மூன்று ஆண்டுகள் முடிவுற்று 22.02.2013 முதல் பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி மாத வாடகையாக ரூ.1,225/- ஆக மாதம் ஒன்றுக்கு உயர்வு செய்யப்பட்டது. 22.02.16-ல் 15% மாத வாடகை உயர்வு செய்து, மாதம் ஒன்றுக்கு ரூ.1,409/- வீதம் உயர்வு செய்யப்பட வேண்டும். ஆனால், பார்வை 3-ல் காணும் தீர்மானத்தின் படி 2021-ல் மாத வாடகை தொகை ரூ.5,672/- ஆக தவறுதலாக உயர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் பார்வை 4-ல் காணும் விண்ணப்பத்தின் படி தவறுதலாக பதியப்பட்டுள்ள வாடகை தொகையை திருத்தி நிர்ணயம் செய்து தருமாறு கோரியுள்ளார்.

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | கடை ஒதுக்கீடு செய்யப் பட்ட நாள் | உரிமக் காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்கப் பட வேண்டிய நாள் | ஏற்கனவே உள்ள மாத வாடகை ரூ. | அரசாணை எண்.92.ந.நி மற்றும் கு.வ.துறை நாள் 03.07.07-ன் படி குறைந்த பட்சம் 15% உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. | தவறுதலாக உயர்வு செய்யப்பட்ட மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 20510 | J141 | எஸ். ஜாபர் அலி | 22.02.10 | 21.02.13 | 22.02.13 | 1,065/- | 1,225/- | |
| 2 | 20510 | J141 | எஸ். ஜாபர் அலி | - | 21.02.16 | 22.02.16 | 1,225/- | 1,409/- | 4,932/- |
| 3 | 20510 | J141 | எஸ். ஜாபர் அலி | - | 31.03.18 | 01.04.18 | 1,409/- | 1,620/- | 4,932/- |
| 4 | 20510 | J141 | எஸ். ஜாபர் அலி | - | 31.03.21 | 01.04.21 | 1,620/- | 1,863/- | 5,672/- |

எனவே, பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடை கடை எண். J-141-க்கு 2021-ல் தவறுதலாக உயர்த்தப்பட்ட மாத வாடகை ரூ.5,672/- ஐ ரூ.1,863/- ஆக 01.04.2021 முதல் நிர்ணயம் செய்யலாம் என வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மான எண். 74 நாள். 19.12.2022 ல் “அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 8204/ 2022/ அ3(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 332 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

**பொருள்.-** கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்தியமண்டலம் , பொறியியல் பிரிவு-வார்டு எண் 80-க்குட்பட்ட சாவித்திரி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்து உள்ளது இதனால் மழைநீர் தேங்கி நின்று சுகாதார சீர்கேடு ஏற்படுகின்றது .எனவே மழைநீர்வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டுதல் அவசர அவசியமாகிறது. எனவே வார்டு எண் 80-க்குட்பட்ட சாவித்திரி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் மழைநீர் வடிகால மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.40,00,000-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு கூட்டபொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு.- அனுமதிக்கலாம் ந.க.எண்.-6857/2022/எம்.டி.5(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 333 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 26**

| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலத்திற்குட்ப்பட்ட எல்லை விரிவாகக்கப்பட்ட அரசு ஊராட்சி ஒன்றிய 3 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு பெருக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள்– வெளிக் கொணர்வு முகமை – ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல்— நிர்வாக அனுமதி –தொடர்பாக |
|---|---|

கோயம்புத்தூர் மாநகராட்சியில் எல்லை விரிவாகக்கப்பட்ட கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளான சேரன்மாநகர், வீரியம் பாளையம், நேரு நகர் ஆகிய 3 எண்ணிக்கையிலான அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு பெருக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் –7 நபர்கள் 220 பள்ளி வேலை நாட்களுக்கும் மற்றும் இரவு காவலர்கள் –3 நபர்கள் 365 நாட்களுக்கும் வெளிக் கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் மற்றும் பள்ளி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ.17,70,000/–ல் மதிப்பீட்டிற்கு மாண்புமிகு மேயா் அவா்களின் நிா்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பாா்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6844 /2022/எம்டி3

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 334 நாள் 29.12.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

------------------------------------------------------------

**பொருள் எண் 27**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலத்திற்குட்ப்பட்ட எல்லை விரிவாகக்கப்பட்ட அரசு ஊராட்சி ஒன்றிய 8 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு பெருக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள்– – வெளிக் கொணர்வு முகமை – ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல்— நிர்வாக அனுமதி–தொடர்பாக

கோயம்புத்தூர் மாநகராட்சியில் எல்லை விரிவாகக்கப்பட்ட கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளான விளாங்குறிச்சி, காளப்பட்டி, கருப்பராயன்பாளையம், ரங்கசாமி கவுண்டன்புதூர், வீட்டு வசதி வாரிய நகர், அத்திக்குட்டை, வழியாம்பாளையம், அம்பேத்கர் நகர் ஆகிய 8 எண்ணிக்கையிலான அரசு ஊராட்சி ஒன்றிய தொடங்கப்பள்ளியில் பெருக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் –16 நபர்கள் 220 பள்ளி வேலை நாட்களுக்கும் மற்றும் இரவு காவலர்கள் –8 நபர்கள் 365 நாட்களுக்கும் வெளிக் கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் மற்றும் பள்ளி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ.42,50,000/–ல் மதிப்பீடு நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6852 /2022/எம்டி3

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 335 நாள் 29.12.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

------------------------------------------------------------

**பொருள் எண் 28**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலத்திற்குட்ப்பட்ட எல்லை விரிவாகக்கப்பட்ட அரசு ஊராட்சி ஒன்றிய 9 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு பெருக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள்– – வெளிக் கொணர்வு முகமை – ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல்— நிர்வாக அனுமதி –தொடர்பாக

கோயம்புத்தூர் மாநகராட்சியில் எல்லை விரிவாகக்கப்பட்ட வடக்கு மண்டலத்திற்குட்ப்பட்ட பகுதிகளான சுப்பிரமணியம்பாளையம் , துடியலூர், சின்னவேடம்பட்டி, உடையாம்பாளையம், ஷாஜகான் நகர், சின்னமேட்டுப்பாளையம் மற்றும் வட்டமலைபாளையம் ஆகிய 7 எண்ணிக்கையிலான அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி 8 எண்ணிக்கையிலான பெருக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் –7 நபர்கள் 220 பள்ளி வேலை நாட்களுக்கும் மற்றும் இரவு காவலர்கள் –7 நபர்கள் 365 நாட்களுக்கும் வெளிக் கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் மற்றும் பள்ளி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ.38,70,000/–ல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6850 /2022/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 336 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 29**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலத்திற்குட்ப்பட்ட எல்லை விரிவாகக்கப்பட்ட அரசு ஊராட்சி ஒன்றிய 8 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு பெருக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள்– – வெளிக் கொணர்வு முகமை – ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல்— நிர்வாக அனுமதி –தொடர்பாக

கோயம்புத்தூர் மாநகராட்சியில் எல்லை விரிவாகக்கப்பட்ட வடக்கு மண்டலத்திற்குட்ப்பட்ட பகுதிகளான கே.என்.ஜி.புதூர், சிவானந்தாபுரம், LGB நகர், கந்தசாமி நகர், சரவணம்பட்டி, வெள்ளகிணறு,உருமாண்டம்பாளையம் மற்றும் அப்பநாயக்கன்பாளையம் ஆகிய 8 எண்ணிக்கையிலான அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கான 8 எண்ணிக்கையிலான பெருக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் –8 நபர்கள் 220 பள்ளி வேலை நாட்களுக்கும் மற்றும் இரவு காவலர்கள் –8 நபர்கள் 365 நாட்களுக்கும் வெளிக் கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் மற்றும் பள்ளி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ.42,40,000/–ல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6849 /2022/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 337 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 30**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்குட்ப்பட்ட எல்லை விரிவாகக்கப்பட்ட அரசு ஊராட்சி ஒன்றிய 5 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு பெருக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள்– வெளிக் கொணர்வு முகமை – ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல்— நிர்வாக அனுமதி –தொடர்பாக

கோயம்புத்தூர் மாநகராட்சியில் எல்லை விரிவாகக்கப்பட்ட தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளான வையாபுரி நகர், அண்ணா நகர், நொய்யல்பாலம், கோணவாய்ககால்பாளையம், மற்றும் கணேஷபுரம் ஆகிய 5 எண்ணிக்கையிலான அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கான 5 எண்ணிக்கையிலான பெருக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் –5 நபர்கள் 220 பள்ளி வேலை நாட்களுக்கும் மற்றும் இரவு காவலர்கள் –5 நபர்கள் 365 நாட்களுக்கும் வெளிக் கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் மற்றும் பள்ளி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ.26,70,000/– ல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6845 /2022/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 338 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 31**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்ப்பட்ட எல்லை விரிவாகக்கப்பட்ட அரசு ஊராட்சி ஒன்றிய 7 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு பெருக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள்– வெளிக் கொணர்வு முகமை – ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல்— நிர்வாக அனுமதி –தொடர்பாக

கோயம்புத்தூர் மாநகராட்சியில் எல்லை விரிவாகக்கப்பட்ட தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளான ஈச்சனாரி, சித்தண்ணபுரம், குறிச்சி –சுந்தராபுரம், காமராஜ் நகர், கோண்டி நகர்,நஞ்சேகவுண்டன்புதூர் மற்றும் மேட்டூர் போத்தனூர் ஆகிய 7 எண்ணிக்கையிலான அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கான 7 எண்ணிக்கையிலான பெருக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் –7 நபர்கள் 220 பள்ளி வேலை நாட்களுக்கும் மற்றும் இரவு காவலர்கள் –7 நபர்கள் 365 நாட்களுக்கும் வெளிக் கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் மற்றும் பள்ளி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ.37,20,000/– ல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6851 /2022/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 339 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 32**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்குட்ப்பட்ட எல்லை விரிவாகக்கப்பட்ட அரசு ஊராட்சி ஒன்றிய 9 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு பெருக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள்– வெளிக் கொணர்வு முகமை – ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல்— நிர்வாக அனுமதி–தொடர்பாக

கோயம்புத்தூர் மாநகராட்சியில் எல்லை விரிவாகக்கப்பட்ட தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளான மாச்சம்பாளையம், இராமசெட்டிபாளையம், சுண்டாக்காமுத்தூர், குனியமுத்தூர், நரசிம்மபுரம், சுகுணாபுரம், இடையர்பாளையம், குளத்துபாளையம், அஞ்சுகம் நகர் ஆகிய 9 எண்ணிக்கையிலான அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கான 8 எண்ணிக்கையிலான பெருக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் –17 நபர்கள் 220 பள்ளி வேலை நாட்களுக்கும் மற்றும் இரவு காவலர்கள் –9 நபர்கள் 365 நாட்களுக்கும் வெளிக் கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் மற்றும் பள்ளி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ.47,00,000/– ல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6846 /2022/எம்டி4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 340 நாள் 29.12.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 33**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலத்திற்குட்ப்பட்ட எல்லை விரிவாகக்கப்பட்ட அரசு ஊராட்சி ஒன்றிய 9 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு பெருக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள்– – வெளிக் கொணர்வு முகமை – ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல்— நிர்வாக அனுமதி –தொடர்பாக

கோயம்புத்தூர் மாநகராட்சியில் எல்லை விரிவாகக்கப்பட்ட மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளான லிங்கே கவுண்டன்புதூர், வடவள்ளி, இடையர்பாளையம், வீரகேரளம், கவுண்டம்பாளையம் மற்றும் அசோக்நகர்(கிழக்கு) ஆகிய 9 எண்ணிக்கையிலான அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கான 9 எண்ணிக்கையிலான பெருக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் –10 நபர்கள் 220 பள்ளி வேலை நாட்களுக்கும் மற்றும் இரவு காவலர்கள் –9 நபர்கள் 365 நாட்களுக்கும் வெளிக் கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் மற்றும் பள்ளி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ.47,70,000/–ல் மதிப்பீடு நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6848 /2022/எம்டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 341 நாள் 29.12.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 34

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலத்திற்குட்ப்பட்ட எல்லை விரிவாகக்கப்பட்ட அரசு ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் பெருக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள்– வெளிக் கொணர்வு முகமை – ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல்— நிர்வாக அனுமதி –தொடர்பாக

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்ப்பட்ட சுண்டப்பாளையம், பொங்காளியூர், அஜ்ஜனூர், கல்வீரம்பாளையம், மருதாபுரம், சிக்கராயப்புரம், IOB காலனி, தொண்டாம்புத்தூர் எல்லை விரிவாகக்கப்பட்ட அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கான **8** எண்ணிக்கையிலான பெருக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் **–8** நபர்கள் **220** பள்ளி வேலை நாட்களுக்கும் மற்றும் இரவு காவலர்கள் **–8** நபர்கள் **365** நாட்களுக்கும் வெளிக் கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் மற்றும் பள்ளி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ.**42,40,000/– /–**ல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். **6847 /2022/**எம்டி**2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 342 நாள் 29.12.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 35

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - கோவை சங்கனூர் மெயின் ரோடு இராயப்பா நகர் வாட்டர் டேங்க் கட்டிடத்தில் இரண்டாம் தளத்தில் இயங்கிவரும் தனிப்பிரிவு திட்டமிட்ட குற்ற நுண்ணறிவு பிரிவு அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்த - உரிம கட்டணம் உயர்வு செய்து உரிமம் நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள்.03.07.2007.
2. காவல் ஆய்வாளர், திட்டமிட்ட குற்ற நுண்ணறிவு பிரிவு அவர்களின் கடித நாள். 27.10.2022

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 30 - மாநகராட்சிக்கு சொந்தமான சங்கனூர் மெயின் ரோடு இராயப்பா நகர் வாட்டர் டேங்க் கட்டிடத்தில் இரண்டாம் தளத்தில் இயங்கிவரும் தனிப்பிரிவு திட்டமிட்ட குற்ற நுண்ணறிவு பிரிவு அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு தற்போது வரை இயங்கி வருகிறது.

பார்வை(1)யில் காணும் அரசாணையில் மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் மற்றும் வணிக வளாக கடைகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 சதவீதம் உரிமகட்டணம் உயர்வு செய்ய வேண்டும் எனவும், ஒன்பது ஆண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு சந்தை மதிப்பின் அடிப்படையில் உரிம கட்டணம் மறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை(2)ல் காணும் காவல் ஆய்வாளர், திட்டமிட்ட குற்ற நுண்ணறிவு பிரிவு அவர்களின் கடிதத்தில் 19.11.2022 முதல் 18.11.2025 வரை வாடகை உயர்வு செய்ய சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இராயப்பா நகர் வாட்டர் டேங்க் இரண்டாம் தளம் (வார்டு எண் 47)**

| வ.எ ண் | பெயர் | தற்போதைய உரிம கட்டணம் | 15 % உயர்வு செய்யப்பட வேண்டிய கட்டணம் | உரிமம் புதுப்பிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1 | காவல் ஆய்வாளர் திட்டமிட்ட குற்ற நுண்ணறிவு பிரிவு | 17711 | 20368 | 19.11.2022 18.11.2025 |

எனவே 19.11.2022 முதல் 18.11.2025 வரை மூன்று ஆண்டுகளுக்கு 15 சதவீதம் வாடகை ரூ.20,368/-ஐ உயர்வு செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் **தீர்மான எண்**.69, **நாள்**.19.12.2022**ன்** படி இப்பொருளினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் பரிந்துரையின்படி, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் **ந.க.எண்**/1780/2012/**அ**1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 343 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 36

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - தியாகி குமரன் மாா்க்கெட் புதியதாக கட்டப்பட்டுள்ள 89 மேடை கடைகள் - 2022-23 முதல் 2024-25ம் ஆண்டிற்கு நடத்திக்கொள்ளும் உரிமம் - 05.04.2022 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படைப்பு செய்வது – தொடர்பாக.

பார்வை :
1. மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். WP No. 884/2022 உத்திரவு நாள். 25.01.2022.
2. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நாள். 05.04.2022.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண். 83, தியாகி குமரன் மாா்க்கெட் புதியதாக கட்டப்பட்டுள்ள 89 மேடை கடைகள் பாா்வையில் காணும் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். WP No. 884/2022 25.01.2022 உத்திரவின் படியும், 2022-23 முதல் 2024-25ம் ஆண்டு முடிய நடத்திக்கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை ரூ.50,000/-லிருந்து ரூ.25,000/- ஆக குறைத்து 05.04.2022 அன்று காலை 11.30 மணிக்கு மத்திய மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு உயர்ந்த பட்சமாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் ஏலதாரா்களால் கோரப்பட்டுள்ளது.

| தியாகி குமரன் மாா்க்கெட் புதியதாக கட்டப்பட்டுள்ள 89 மேடை கடைகள் ஏலம் , ஒப்பந்தப்புள்ளி விபரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கடை எண் | கடையின் அளவு சதுர அடி | உயா்ந்தபட்ச ஏலதாரா் பெயர் | உயா்ந்த பட்ச கேள்வி மற்றும் மாத ஒன்றிற்கு | உயா்ந்தபட்ச கேள்வி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி | செலுத்திய வைப்புத் தொகை | செலுத்தப்பட வேண்டிய 12 மாதம் வாடகை முன் வைப்புத் தொகை |
| 1 | 57 | P.M. பெருமாள் | 6200 | ஏலம் | 25000 | 74400 |
| 2 | 57 | M.P. ஹரி ராமசாமி | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 3 | 57 | M. அருண்சங்கா் | 6500 | ஒப்பந்தப்புள்ளி | 25000 | 78000 |
| 4 | 57 | P. சாமிநாதன் வேல் கண்ணன் | 7100 | ஏலம் | 25000 | 85200 |
| 5 | 57 | S. ரஞ்சித்குமாா் | 7150 | ஏலம் | 25000 | 85800 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | 57 | S. நபீர் | 6850 | ஏலம் | 25000 | 82200 |
| 7 | 57 | P. மாரீசன் | 6600 | ஏலம் | 25000 | 79200 |
| 8 | 57 | R. அரவிந்த் | 6300 | ஏலம் | 25000 | 75600 |
| 9 | 64 | M. செல்வம் | 13500 | ஒப்பந்தப்புள்ளி | 25000 | 162000 |
| 10 | 57 | M. செல்வம் | 13500 | ஒப்பந்தப்புள்ளி | 25000 | 162000 |
| 11 | 57 | V. ராம்பிராசத் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 12 | 57 | P. முத்துராஜ் | 6600 | ஏலம் | 25000 | 79200 |
| 13 | 57 | B. சாவித்திரி | 6400 | ஏலம் | 25000 | 76800 |
| 14 | 57 | S. சதிஷ் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 15 | 57 | A. கிருஷ்ணன் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 16 | 57 | T. ஹரிபிராசத் | 6250 | ஏலம் | 25000 | 75000 |
| 17 | 57 | K. ஆறுச்சாமி | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 18 | 57 | M. பெருமாள் முத்து | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 19 | 57 | R. சோலையப்பன் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 20 | 57 | C. தமிழரசி | 6500 | ஒப்பந்தப்புள்ளி | 25000 | 78000 |
| 21 | 69 | C. தமிழரசி | 7200 | ஏலம் | 25000 | 86400 |
| 22 | 57 | R. சுகுமாரன் | 9000 | ஒப்பந்தப்புள்ளி | 25000 | 108000 |
| 23 | 57 | A. தா்மராஜ் | 6350 | ஏலம் | 25000 | 76200 |
| 24 | 57 | K. மகேஷ்வரன் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 25 | 57 | R. அருள் | 7000 | ஏலம் | 25000 | 84000 |
| 26 | 57 | S. ஹக்கீம் | 6700 | ஏலம் | 25000 | 80400 |
| 27 | 57 | M.S. தியாகு | 7000 | ஏலம் | 25000 | 84000 |
| 28 | 57 | S. ஹக்கீம் | 6750 | ஏலம் | 25000 | 81000 |
| 29 | 57 | S. ஹக்கீம் | 6750 | ஏலம் | 25000 | 81000 |
| 30 | 64 | N. வினிஷ் | 6750 | ஏலம் | 25000 | 81000 |
| 31 | 57 | J. ராஜசேகரன் | 7100 | ஏலம் | 25000 | 85200 |
| 32 | 57 | R. கிருஷ்ணன் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 33 | 57 | G. பாண்டியராஜ் | 6150 | ஏலம் | 25000 | 73800 |
| 34 | 57 | S. சுமித்ரா | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 35 | 57 | S. சுகுமாா் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 36 | 57 | M. அருண்சங்கா் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 37 | 57 | R. காா்த்திக் | 6150 | ஏலம் | 25000 | 73800 |
| 38 | 57 | P. சாமிநாதன் வேல் கண்ணன் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 39 | 57 | M. சிவராமகிருஷ்ணன் | 6250 | ஏலம் | 25000 | 75000 |
| 40 | 57 | C. பானுமதி | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 41 | 57 | B. விக்னேஷ் | 6600 | ஒப்பந்தப்புள்ளி | 25000 | 79200 |
| 42 | 69 | B. விக்னேஷ் | 8000 | ஏலம் | 25000 | 96000 |
| 43 | 57 | S. சுகுமாா் | 6250 | ஏலம் | 25000 | 75000 |
| 44 | 57 | S. சுமித்ரா | 6250 | ஏலம் | 25000 | 75000 |
| 45 | 57 | S. சுமித்ரா | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 46 | 57 | E. ரமேஷ் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 47 | 57 | J. வேம்பு | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 48 | 57 | E. அக்ஷயவா்மா | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 49 | 57 | J. ராஜசேகரன் | 6050 | ஏலம் | 25000 | 72600 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 50 | 57 | S. ராஜசேகர் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 51 | 64 | S. ராஜசேகர் | 7000 | ஏலம் | 25000 | 84000 |
| 52 | 57 | R. குமார் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 53 | 57 | S. சுமதி | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 54 | 57 | A. கிருஷ்ணன் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 55 | 57 | K. மகேஷ்வரன் | 6150 | ஏலம் | 25000 | 73800 |
| 56 | 57 | P. சண்முகசுந்தரம் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 57 | 57 | A. வெங்கடேஷ் | 6500 | ஒப்பந்தப்புள்ளி | 25000 | 78000 |
| 58 | 57 | R. ராமசாமி | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 59 | 57 | T. மனோஜ்குமார் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 60 | 57 | T. மணிகண்டன் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 61 | 57 | கலைவாணன் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 62 | 57 | S. முருகானந்தம் | 6200 | ஒப்பந்தப்புள்ளி | 25000 | 74400 |
| 63 | 69 | C.S. பாலாஜி | 7000 | ஏலம் | 25000 | 84000 |
| 64 | 57 | R. வெங்கடேஷ் பிரகாஷ் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 65 | 57 | R. வெங்கடேஷ் பிரகாஷ் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 66 | 57 | R. கார்த்திக் | 6050 | ஏலம் | 25000 | 72600 |
| 67 | 57 | R. கார்த்திக் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 68 | 57 | S. சுகுமார் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 69 | 57 | S. அமுதா | 6300 | ஏலம் | 25000 | 75600 |
| 70 | 57 | S. கைலாஷ் | 6200 | ஏலம் | 25000 | 74400 |
| 71 | 57 | S. கைலாஷ் | 6200 | ஏலம் | 25000 | 74400 |
| 72 | 64 | M. சிவராமகிருஷ்ணன் | 6150 | ஏலம் | 25000 | 73800 |
| 73 | 57 | N. M. கார்த்திகேயன் | 6200 | ஏலம் | 25000 | 74400 |
| 74 | 57 | M.N. அஜித்குமார் | 6150 | ஏலம் | 25000 | 73800 |
| 75 | 57 | N. கோபலகிருஷ்ணன் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 76 | 57 | V. ராம்பிரசாத் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 77 | 57 | C.R.S. கமல்ராஜ் | 6200 | ஏலம் | 25000 | 74400 |
| 78 | 69 | S. முருகானந்தம் | 6800 | ஏலம் | 25000 | 81600 |
| 79 | 57 | R. முருகேசன் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 80 | 57 | C.S. பாலாஜி | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 81 | 57 | J. மோகன்குமார் | 6200 | ஏலம் | 25000 | 74400 |
| 82 | 57 | C.N. பழனிச்சாமி | 6200 | ஏலம் | 25000 | 74400 |
| 83 | 57 | C.N. பழனிச்சாமி | 6200 | ஏலம் | 25000 | 74400 |
| 84 | 57 | C.N. பரமசிவன் | 6700 | ஏலம் | 25000 | 80400 |
| 85 | 62 | C.N. பரமசிவன் | 8150 | ஏலம் | 25000 | 97800 |
| 86 | 57 | P. விக்னேஷ்குமார் | 7100 | ஏலம் | 25000 | 85200 |
| 87 | 57 | P. சண்முகசுந்தரம் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 88 | 57 | S. ஹக்கீம் | 6100 | ஏலம் | 25000 | 73200 |
| 89 | 62 | V. சங்கீதா | 6500 | ஒப்பந்தப்புள்ளி | 25000 | 78000 |
| மொத்தம் | | | 582700 | | 2225000 | 6992400 |

மேற்காணும் 89 கடைகளுக்கு வரப்பெற்றுள்ள உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசு மதிப்பை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் மேற்காண் கடைகளுக்கு வரப்பெற்ற உயர்ந்த பட்ச கேள்விதொகையை ஏற்று உயர்ந்த பட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்வது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டத்தில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண். 6 நாள்.06.04.2022 மூலம் அலுவலக்குறிப்பை ஏற்று மாமன்றத்திக்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு கடைகள் ஒப்படை செய்யப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண். : 2176/2021/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 344 நாள் 29.12.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 37**

**கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் தமிழ் நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம் (TURIP Savings, interest fund 2021-22) கீழ் சேதமடைந்த தார் சாலைகளை சீரமைக்க 17 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ரூ.2600.03 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.24826/2022/SS2 நாள்.07.09.2022 நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி தேதி 29.09.2022 அன்று கோரப்பட்டு ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதன் அடிப்படையில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது.**

**மேற்காண் சாலை பணிகளில் பயன்படுத்தப்படும் பொருள்களின் தரங்கள் மற்றும் அளவு குறித்தும் பணி நடைபெறும் இடங்களில் நேரடியாக ஆய்வு குறித்தும் மூன்றாம் நபர் கள ஆய்வு செய்து அவ்வப்பொழுது அறிக்கை வழங்க கோயம்புத்தூர் அரசு பொறியியல் கல்லூரி மற்றும் கோயம்புத்தூர் தொழில்நுட்ப கல்லூரி முதல்வர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கான கட்டண விகிதம் குறித்து தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.**

**அதன் அடிப்படையில் அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் மட்டுமே ஆய்வு செய்து அறிக்கை வழங்க கட்டண விகிதங்களை தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் 17 சிப்பங்களில் தார் சாலை பணிகள் நடைபெறுவதை ஆய்வு செய்து அறிக்கைகள் பெற கட்டணம் ரூ.35,51,800.00/- ஆகும்.**

**பணிகளின் தரம் கண்காணிப்பு காரணங்களுக்காக இக்கட்டணத்தை செலுத்த மாமன்ற அனுமதி பெற்று மாநகராட்சி நிதியில் செலுத்தலாம். கோயம்புத்தூர் அரசு பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள் மூலம் மூன்றாம் நபர் தர ஆய்வு பணி செய்யலாம். ஆய்வு கட்டணம் ரூ.35,51,800/- செலுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4721/2022/எம்டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 345 நாள் 29.12.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 38

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – சின்னவேடம்பட்டி கிராமம் – நில அளவை எண்கள்: 586/1A2, 590/3B-ல் 2712.36 சமீ மனைபரப்பு Block A, Block B, ஸ்டில்ட், தரை **3** தளங்களில் **32** குடியிருப்புகளுக்கு மனையிட ஒப்புதலுடன் திட்ட அனுமதி வழங்க இசைவளிக்கப்பட்டதனை ரத்து செய்து முந்தைய சின்னவேடம்பட்டி பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது ஒதுக்கீட்டினை திரும்ப வழங்க கோரியது – நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முன்மொழிவுகள் அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் அனுமதி பெறப்பட்டது – மாமன்றத்திற்கு பொருள் வைத்தல் – தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் திரு. வி.வி.எஸ். லஷ்மணன், வி.வி.எஸ். டெவலப்பர்ஸ், ஹைதராபாத் அவர்களது கடித நாள்: **09.09.2021** மற்றும் **18.09.2021.**
2. நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலக உத்தரவு ந.க. எண். **8884/2022**/கூஊஇ**3**, நாள்: **04.07.2022.**
3. நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்டப்பொருள் தீர்மானம் எண். **12**, நாள்: **18.10.2022.**

---

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட சின்னவேடம்பட்டி கிராமம் பகுதியில் நில அளவை எண்கள்: 586/1A2, 590/3B–ல் **2712.36** சமீ மனைபரப்பு Block A, Block B, ஸ்டில்ட், தரை **3** தளங்களில் **32** குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி முன்மொழிவுக்கு **03.10.2011** முதல் மூன்று ஆண்டுகளுக்கு திட்ட அனுமதி எண். **315/2011** –ல் உள்ளூர் திட்டக்குழுமத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த திட்ட அனுமதியின் அடிப்படையில் கட்டிட பணிகளை உத்தேசித்தபடி மனுதாரர் மேற்கொள்ளவில்லை. எனவே, திட்ட அனுமதி காலாவதியாகி விட்டது. மேலும் கட்டிட பணிகள் துவங்காமல் இடம் காலியாகவே உள்ளது. மனையிடம் அப்போதைய சின்னவேடம்பட்டி பஞ்சாயத்தின் வசம் இருந்தாலும் தற்சமயம் கோவை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதியில் உள்ளது. மனுதாரரால் கட்டுமானப்பணிகள் துவங்கப்படாததால் பார்வையில் **2**–ல் காண் நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலக உத்தரவு ந.க. எண். **8884/2022**/TCP3, நாள்: **04.07.2022** – ன் வாயிலாக திட்ட அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்த உத்தேசத்திற்காக உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட (OSR Land)திறந்த வெளி பொது ஒதுக்கீட்டு இடத்தினை ஒப்படைக்குமாறு பார்வையில் கண்டுள்ள மனுதாரரது கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரரால் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட **271.375** சதுர மீட்டர் பரப்பளவு பொது ஒதுக்கீட்டு இடத்தினை திரும்ப வழங்கக்கோரும் முன்மொழிவினை அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் ஒப்புதல் பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மூலமாக அனுப்ப மாமன்றத்திற்கு பொருள் வைக்க பார்வை–**3**ல் நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். **6166/2021**/எம்எச்**3**(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 346 நாள் 29.12.2022**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

## பொருள் எண் 39

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திகுட்பட்ட வார்டு பகுதிகளில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மத்திய மண்டலம், வார்டு எண்.**82**–க்குட்பட்ட அவினாசி மேம்பாலம் அனுகு சாலையில் மறு தார் தளம் அமைத்தல் ந.க.எண்.**1384/22**/எம்.டி.**5** | **11.35** | மா.மே.அ. நாள். **25.03.22** | மூன்றாம் அழைப்பு **26.07.22** | **1)**.திரு. எஸ் . ரத்தினவேல்சாமி 2.10 % **குறைவு**<br><br>**2)**/திரு.கே. சுந்தரம் 3.93 % **அதிகம்** | திரு. எஸ். ரத்தினவேல்சாமி 2.10 % **குறைவு** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | மத்திய மண்டலம் – வார்டு எண்.48–க்குட்பட்ட சாஸ்திரி நகரில் அமைந்துள்ள நுண்ணுரம் தயாரிக்கும் மையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள். ந.க.எண்.5507/22/எம்.டி.5 | 30.50 | ப.குழு அனுமதி நாள். 10.10.22 | முதலாம் அழைப்பு 21.10.22 | 1).திரு.ஆர். செல்வராஜ் மதிப்பீட்டை விட 0.37% குறைவு | திரு.ஆர். செல்வராஜ் மதிப்பீட்டை விட 0.37% குறைவு |
| 3 | மத்திய மண்டலம் வார்டு எண்.83–க்குட்பட்ட ஒசூர் சாலையிலுள்ள மத்திய மண்டல அலுவலகத்தை ஒரு வருட காலத்திற்கு பராமரித்தல். ந.க.எண்.3521/2022/எம்டி2 | 15.00 | மா.மே முன் அனுமதி நாள். 22.08.22 | முதலாம் அழைப்பு 23.08.22 | 1).தி/ள்.சானிட் டெக்னாலஜீஸ் மதிப்பீட்டை விட 0.60% குறைவு<br><br>2).தி/ள். என்.எஸ்.பி அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 1.65% அதிகம் | தி/ள்.சானிட் டெக்னாலஜீஸ் மதிப்பீட்டை விட 0.60% குறைவு |
| 4 | மத்திய மண்டலம் வார்டு எண்.67–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல். ந.க.எண்.2728/2022/எம்டி5 | 12.50 | மா.தீ.எண். 107 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 26.05.22 | 1).தி/ள்.ஸ்ரீ சௌபர்ணிகா அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 1.03% குறைவு<br><br>2).தி/ள்.ஆர்.ஆர். எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 0.04% குறைவு | தி/ள்.ஸ்ரீ சௌபர்ணிகா அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 1.03% குறைவு |
| 5 | மத்திய மண்டலம் – வார்டு எண்.64–க்குட்பட்ட மசால் லே அவுட் (போலீஸ் கந்தசாமி வீதி முதல் புலியகுளம் தண்ணீர் தொட்டி) வரையுள்ள கால்வாய்யைத் தூர்வாருதல். ந.க.எண்.4159/22/எம்.டி.5 | 19.70 | மா.மே. அனுமதி நாள். 02.08.22 | முதலாம் அழைப்பு 23.08.22 | 1).தி/ள். செவ்வேல் அன் கோ மதிப்பீட்டை விட 2.00% குறைவு<br><br>2).தி/ள்.பி.ஏ.டி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 2.14% குறைவு | தி/ள்.பி.ஏ.டி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 2.14% குறைவு |
| 6 | மத்திய மண்டலம் – வார்டு எண்.66–க்குட்பட்ட அம்மன்குளம் புதிய ஹவுசிங் யூனிட் பகுதியில் ஆழ்குழாய் கிணறு மற்றும் கழிவு நீர் உந்து நிலையத்தை பத்து மாத காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல். ந.க.எண்.3286/22/எம்.டி.5 | 11.80 | மா.மே. அனுமதி நாள். 22.07.22 | இரண்டாம் அழைப்பு 23.09.22 | 1). தி/ள்.பி.ஏ.டி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 0.01% குறைவு<br><br>2).திரு. பி.இளங்கோ மதிப்பீட்டை விட 0.15% அதிகம் | தி/ள்.பி.ஏ.டி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 7 | மத்திய மண்டலம் - வார்டு எண்.62-க்குட்பட்ட சாரமேடு பகுதிகளில் கழிவுநீர் வெளியேற்ற நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் மோட்டார் பழுதடைந்துள்ளதை மாற்றி அமைக்க 21 H.P கழிவுநீர் உந்து மோட்டார் வழங்கி பொருத்துதல். ந.க.எண்.4037/22/எம்டி5 | 13.50 | மா.மே அனுமதி நாள். 22.07.22 | முதலாம் அழைப்பு 23.08.22 | 1).தி/ள்.ஸ்ரீ ஹரி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 1.00% அதிகம்<br><br>2).திரு. ஆர்.மாணிக்கம் மதிப்பீட்டை விட 4.51% குறைவு | திரு.ஆர். மாணிக்கம் மதிப்பீட்டை விட 4.51% குறைவு |
| 8 | மத்திய மண்டலம் – வார்டு எண்.84–க்குட்பட்ட ஜி.எம் நகர் பகுதியிலுள்ள கழிவு நீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல். ந.க.எண்.4041/22/எம்.டி5 | 6.95 | மா.மே முன் அனுமதி நாள். 22.07.22 | முதலாம் அழைப்பு 06.09.22 | 1).திரு. ஆர்.மாணிக்கம் மதிப்பீட்டை விட 0.26% குறைவு<br><br>2).தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 3.52% குறைவு<br>3).திருமதி.எஸ். மணிமேகலை மதிப்பீட்டை விட 3.97% குறைவு<br>4).தி.ரு.ஏ.எம். ராஜகோபால் மதிப்பீட்டு தொகை | திருமதி. எஸ்.மணிமேகலை மதிப்பீட்டை விட 3.97% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | மத்திய மண்டலம் – வார்டு எண்.82–க்குட்பட்ட பிரதான அலுவலகம் கல்லிநிலைக்குழு தலைவர் அலுவலகம் மற்றும் கல்வி பிரிவு அலுவலகம் ஆகியவற்றில் அபிவிருத்தி மற்றும் பராமரித்தல், ந.க.எண். 3046/2022/எம்.டி5 | 30.00 | ப.கு.தீ. எண்.10 நாள். 24.06.22 | முதலாம் அழைப்பு 05.08.22 | தி/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.32% அதிகம்<br><br>2). திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட (விலை குறைப்பிற்கு பின்) 0.10% குறைவு | திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட (விலை குறைப்பிற்கு பின்) 0.10% குறைவு |
| 10 | மத்திய மண்டலம் – வார்டு எண்.62–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஆழப்படுத்துதல். ந.க.எண்.2058/2022/எம்.டி.5 | 4.35 | மா.மே. முன் அனுமதி நாள். 08.04.22 | இரண்டாம் அழைப்பு 04.08.22 | 1).திருமதி. எஸ்.மணிமேகலை மதிப்பீட்டை விட 0.78% குறைவு | திருமதி. எஸ்.மணிமேகலை மதிப்பீட்டை விட 0.78% குறைவு |
| 11 | மத்திய மண்டலம் – வார்டு எண்.83–க்குட்பட்ட இராமலிங்கம் ஜோதி நகரில் தெற்கு பிள்ளையார் கோவிலிருந்து நஞ்சுண்டாபுரம் சாலை வரையுள்ள வாய்க்காலை தூர்வாரி பழுதடைந்த மூடுபலகைகள் மாற்றியமைத்து நடைபாதை தளம் அமைத்தல். ந.க.எண். 2708/2022/எம்.டி5 | 24.00 | ப.கு.தீ. எண்.9 நாள். 18.05.22 | இரண்டாம் அழைப்பு 02.08.22 | 1).தி/ள். ஜெயலட்சுமி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.07% குறைவு | தி/ள். ஜெயலட்சுமி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| 12 | மத்திய மண்டலம் – வார்டு எண்.70–க்குட்பட்ட கிருஷ்ணசாமி சாலையில் தார் சாலை புதுப்பித்தல். ந.க.எண். 3056/2022/எம்.டி5 | 39.80 | வ.வி.நி. கு.எண். 29 நாள். 20.06.22 | முதலாம் அழைப்பு 02.08.22 | 1).தி/ள்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 5.01% குறைவு<br><br>2).தி/ள். கே.எஸ்.ஆர் அன் கம்பெனி மதிப்பீட்டை விட 1.57% குறைவு | தி/ள்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 5.01% குறைவு |
| 13 | மத்திய மண்டலம் – வார்டு எண்.68–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br><br>ந.க.எண். 2710/2022/எம்.டி5 | 11.50 | ம.தீ.எண். 108 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 02.08.22 | 1).திரு.ஆர்.வி.பி பாலமுருகன் மதிப்பீட்டை விட 5.00% குறைவு<br><br>2).திரு. எம்.ராம்ராஜ் மதிப்பீட்டுத் தொகை | திரு.ஆர்.வி.பி பாலமுருகன் மதிப்பீட்டை விட 5.00% குறைவு |
| 14 | மத்திய மண்டலம் – வார்டு எண்.48–க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தார் ஒட்டு போடுதல். ந.க.எண். 2787/2022/எம்.டி5 | 10.20 | ம.தீ.எண். 143 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 05.08.22 | 1).தி/ள். ஜெயலட்சுமி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.37% குறைவு | தி/ள். ஜெயலட்சுமி பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.37% குறைவு |
| 15 | மத்திய மண்டலம் – வார்டு எண்.63–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை பத்து மாத காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல். ந.க.எண்.2725/2022/எம்.டி.5 | 8.20 | ம.தீ.எண். எண்.107 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள்.சபரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.04% குறைவு<br><br>2).தி/ள்.ஓம்சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டு தொகை | தி/ள்.சபரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| 16 | வடக்கு மண்டலம் - வார்டு எண்.19–க்குட்பட்ட அசோக் நகர் பிரதான சாலையில் (மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டுதல் பணி) ந.க.எண்:4566/22/எம்.டி.2 | 19.98 | மா.மே.அ. முன் அனுமதி நாள். 30.08.22 | முதலாம் அழைப்பு 28.10.22 | 1).திரு. சி.ஆனந்தகுமார் மதிப்பீட்டை விட 0.10% குறைவு | திரு. சி. ஆனந்தகுமார் மதிப்பீட்டை விட 0.10% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | மத்திய மண்டலம் – வார்டு எண்.31-க்குட்பட்ட பாலாஜி மனைப்பிரிவில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண்.3192/2022/எம்.டி5 | 5.60 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).திரு.ஜி. அருள்குமரன் மதிப்பீட்டை விட 0.004% அதிகம்<br><br>2).திரு. எம்.தண்டபாணி மதிப்பீட்டை விட 2.58% குறைவு | திரு. எம்.தண்டபாணி மதிப்பீட்டை விட 2.58% குறைவு |
| 18 | மத்திய மண்டலம் – வார்டு எண்.32–க்குட்பட்ட தில்லை நகர் பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br><br>ந.க.எண். 3194/2022/எம்.டி5 | 5.60 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).திரு. எம்.தண்டபாணி மதிப்பீட்டை விட 2.58% குறைவு<br><br>2).திரு.ஜி. அருள்குமரன் மதிப்பீட்டை விட 0.004% அதிகம் | திரு. எம்.தண்டபாணி மதிப்பீட்டை விட 2.58% குறைவு |
| 19 | மத்திய மண்டலம் – வார்டு எண்.32–க்குட்பட்ட சுந்தரப்பன் வீதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண். 3195/2022/எம்.டி5 | 5.60 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).திரு. எம்.தண்டபாணி மதிப்பீட்டை விட 2.58% குறைவு<br><br>2).திரு.ஜி. அருள்குமரன் மதிப்பீட்டை விட 0.004% அதிகம் | திரு. எம்.தண்டபாணி மதிப்பீட்டை விட 2.58% குறைவு |
| 20 | மத்திய மண்டலம் – வார்டு எண்.48–க்குட்பட்ட சி.கே காலனி பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண். 3196/2022/எம்.டி5 | 4.00 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).தி/ள்.வி.ஆர் அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.04% குறைவு<br><br>2).திரு.ஆர். கார்த்திகேயன் மதிப்பீட்டுத் தொகை | தி/ள்.வி.ஆர் அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| 21 | மத்திய மண்டலம் – வார்டு எண்.62-க்குட்பட்ட பாரதிதாசன் நகர் பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண்.3197/2022/எம்.டி5 | 7.45 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.51% குறைவு<br><br>2).திரு. ஆர்.மாணிக்கம் மதிப்பீட்டை விட 16.83% அதிகம் | தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.51% குறைவு |
| 22 | மத்திய மண்டலம் – வார்டு எண்.62–க்குட்பட்ட சாரமேடு பிரதான சாலை பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br><br>ந.க.எண். 3198/2022/எம்.டி5 | 7.95 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).தி/ள். ஆர்.மாணிக்கம் மதிப்பீட்டை விட 2.61% குறைவு<br>2).தி.ரு.ஏ.எம். ராஜகோபால் மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br><br>3).தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 3.03% குறைவு | தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 3.03% குறைவு |
| 23 | மத்திய மண்டலம் – வார்டு எண்.64–க்குட்பட்ட திருவள்ளுவர் நகர் பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண். 3199/2022/எம்.டி5 | 6.95 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.39% குறைவு<br><br>2).திரு. எஸ்.சுதாகர் மதிப்பீட்டை விட 0.01% குறைவு | தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.39% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24 | மத்திய மண்டலம் – வார்டு எண்.65–க்குட்பட்ட வீரப்பதேவர் காலனி பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண். 3200/2022/எம்.டி5 | 6.95 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.39% குறைவு<br><br>2).தி/ள்.சி.ஆர்.பி. கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.13% அதிகம் | தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.39% குறைவு |
| 25 | மத்திய மண்டலம் – வார்டு எண்.69–க்குட்பட்ட பாரதிபார்க் பிரதான சாலை பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br><br>ந.க.எண். 3201/2022/எம்.டி5 | 9.00 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.39% குறைவு<br>2).திரு. பி.கனகராஜ் மதிப்பீட்டை விட 4.94% குறைவு<br>3).திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் மதிப்பீட்டை விட 6.61% குறைவு<br>4).தி/ள்.ஆர்&கே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 5.03% குறைவு | திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் மதிப்பீட்டை விட 6.61% குறைவு |
| 26 | மத்திய மண்டலம் – வார்டு எண்.80–க்குட்பட்ட குமரேசன் நகர் மற்றும் கே.சி.தோட்டம் பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை பத்து மாத காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br><br>ந.க.எண். 3202/2022/எம்.டி5 | 6.50 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.49% குறைவு<br><br>2).தி.ரு.ஏ.எம். ராஜகோபால் மதிப்பீட்டை விட 0.61% குறைவு | தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.49% குறைவு |
| 27 | மத்திய மண்டலம் – வார்டு எண்.80–க்குட்பட்ட சாவித்திரி நகர் மற்றும் சுண்டக்காமுத்தூர் ரோடு பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை பத்து மாத காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண். 3203/2022/எம்.டி5 | 6.50 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).திருமதி. எஸ்.மணிமேகலை மதிப்பீட்டை விட 4.13% குறைவு<br>2).தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.49% குறைவு | தி/ள்.ஜி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.49% குறைவு |
| 28 | மத்திய மண்டலம் – வார்டு எண்.80–க்குட்பட்ட கள்ளமேடு பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை பத்து மாத காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண். 3204/2022/எம்.டி5 | 6.50 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).தி/ள். ஜி.அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.40% குறைவு<br>2).திருமதி. எஸ்.மணிமேகலை மதிப்பீட்டை விட 0.23% குறைவு | தி/ள். ஜி.அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.40% குறைவு |
| 29 | மத்திய மண்டலம் – வார்டு எண்.83–க்குட்பட்ட கடலகார லைன் பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை பத்து மாத காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண். 3205/2022/எம்.டி5 | 5.50 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).திரு. ஆர்.மாணிக்கம் மதிப்பீட்டை விட 1.58% குறைவு<br>2).தி.ரு.ஏ.எம். ராஜகோபால் மதிப்பீட்டை விட 0.31% குறைவு | திரு. ஆர்.மாணிக்கம் மதிப்பீட்டை விட 1.58% குறைவு |
| 30 | மத்திய மண்டலம் – வார்டு எண்.83–க்குட்பட்ட அவினாசி ரோடு மேம்பாலம் மற்றும் காளீஸ்வரா மில் ரோடு பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து மோட்டாரை பத்து மாத காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.<br>ந.க.எண். 3206/2022/எம்.டி5 | 6.50 | ம.தீ.எண். 170 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).தி/ள்.செந்தில் அன் கோ (உடையாம் பாளையம்) மதிப்பீட்டை விட 0.08% குறைவு<br>2).திரு.எ.ராதா கிருஷ்ணன் மதிப்பீட்டை விட 1.27% அதிகம் | தி/ள்.செந்தில் அன் கோ (உடையாம் பாளையம்) மதிப்பீட்டை விட 0.08% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 31 | மத்திய மண்டலம் – வார்டு எண்.84–க்குட்பட்ட பிஸ்மி நகர் பகுதியிலுள்ள கழிவு நீர் உந்து மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல். ந.க.எண்.4042/2022/எம்.டி5 | 7.95 | மா.மே முன் அனுமதி நாள். 22.07.22 | முதலாம் அழைப்பு 06.09.22 | 1).திரு. ஆர்.மாணிக்கம் மதிப்பீட்டை விட 0.08% குறைவு<br>2). தி.ரு.ஏ.எம். ராஜகோபால் மதிப்பீட்டு தொகை<br>3).தி/ள்.பி.எஸ்.வி. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 3.64% குறைவு<br>3).திருமதி.எஸ். மணிமேகலை மதிப்பீட்டை விட 3.89% குறைவு | திருமதி. எஸ்.மணிமேகலை மதிப்பீட்டை விட 3.89% குறைவு |
மேற்காண் பட்டியிலுள்ள 07 மருந்தாளுநர் காலிப்பிணியிடங்களை நிரப்புவதன் மூலமாக நிலையங்களுக்கு வரும் கர்ப்பிணி தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் நோயாளிகளுக்கு தகுந்த சிகிச்சை மருந்துக்கள் வழங்குவதுடன், முகாம்கள் மூலம் அனைத்து விதமான தடுப்பூசி உள்ளிட்ட தாய்சேய் நலப்பணிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் குழந்தைகளை நோய் தொற்றிலிருந்து காப்பதுடன், அவர்களின் சுகாதாரத்தினை மேற்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். மேலும், நிலையத்தின் நிர்வாகப்பணிகளில் தணிக்கை பணிகள், மருந்துக்கள் தடையின்றி வழங்குவதற்கு ஏதுவாகவும், காலியாகவுள்ள நிலையங்களில் மருந்துகள் விநியோகம் செய்யும் கூடுதல் பணியிலிருந்து செவிலியர்களை விடுவித்து அவர்கள்தம் பணியினை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

மேலும், தற்போது காலியாகவுள்ள 7 மருந்தாளுநர் பணியிடங்களில் 1 மருந்தாளுநர் பணியிடம் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மீதமுள்ள 06 பணியிடங்களை பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை வாயிலாக நிரப்பும் வரை, தற்போது நிலையங்களில் காலியாகவுள்ள **06 மருந்தாளுநர் காலிப்பணியிடங்களை மாநகராட்சியின் மூலம் முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கு** அனுமதியும், மேலும், (**Pharmacist Rs.15,000/-**) 06 மருந்தாளுநருக்கும் சேர்த்து மாதம் ஒன்றிற்கு தொகை ரூ.90,000/-ம் ஊதியச்செலவினம் தேவைப்படுகிறது. அதற்கான செலவின நிதித்தொகையை **மாநகராட்சி பொது நிதியிலிருந்து** முதற்கட்டமாக 6 மாதங்களுக்கு ரூ.5,40,000/-ம் தொகையை ஒதுக்கீடு செய்து வழங்கவும், மேற்காண் நடவடிக்கை மாமன்ற பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :-** மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். ந.க.எண். 4452/2022/ME1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 359 நாள் 29.12.2022**

பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 52

**பொருள்** கோயம்புத்தூர் மாநகராட்சி– பொது சுகாதாரம்– மாநகராட்சி 32 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்– தற்போது காலியாகவுள்ள மற்றும் தேவைப்படும் செவிலியர் பணியாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் முதற்கட்டமாக 20 செவிலியர் பணியாளர் பணியிடங்களை மாநகராட்சியின் மூலம் முற்றிலும் தற்காலிக முறையில் ஒப்பந்த அடிப்படையில் 12 மாத காலத்திற்கு நிரப்புவது– பணியமர்த்தம் செய்யப்படும் செவிலியர் பணியாளர் ஒப்பந்த ஊதியத்தொகை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு அனுமதி வேண்டுதல்– தொடர்பாக.

**பார்வை**

1. அரசாணை நிலை எண். (எம்.எஸ்).**299**, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்.**16/12/2016.**
2. குழும இயக்குநர் மாநில நல்வாழ்வு சங்கம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**4782/SHS/NUHH/2017** நாள்.**14/07/2017.**
3. **W.P.(MD).No. 19565 of 2020 and W.M.P.(MD) Nos. 16296 And 16297 of 2020 Before the Madurai Bench Madras High Court Order dated:22.01.2021.**
4. இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**71998/PHCs/A6/2020** நாள். **09/06/2021.**
5. குழும இயக்குநர் மாநில நல்வாழ்வு சங்கம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**6298/2017/SHS/A4** நாள்.**25/10/2021.**

.........

பார்வை 1,2,3,4 மற்றும் 5-ல் காணும் கடிதங்களின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு உட்பட்ட 32 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், சென்னை பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறையின் கீழ் நிலையம் ஒன்றிற்கு 4 செவிலியர் பணியாளர் (Staff Nurse) வீதம் 32 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி ஆணை பணியாற்றி வருகின்றனர். இதில், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை சென்னை அவர்களின் மூலம் பணியமர்த்தம் செய்யப்படவேண்டிய பணியிடங்கள் காலியிடங்களாக உள்ளது.

**செவிலியர் பணியளார்கள் (Staff Nurse) காலிப்பணியிட விவரப்பட்டியல்**

| செவிலியர் பணியாளர்கள் ஒப்பளிப்பு விவரம் | | எண்ணிக்கை |
|---|---|---|
| **டி.பி.ஹெச் சென்னை ஒதுக்கீடு** | **ஒப்பளிக்கப்பட்ட அளவு** | 128 |
| | **பணியிருப்பு கணக்கின்படி** | 118 |
| | **காலிப்பணியிடம் (கணக்கின்படி)** | 10 |
| | மகப்பேறு விடுப்பு (12)/ வேறு மாவட்டத்திற்கு மாற்றுப்பணியில் உள்ளவர்கள் (2) / நீண்ட நாட்கள் அனுமதியின்றி விடுப்பில் உள்ளவர்கள் (8) | 22 |
| | மக்களைத்தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் மாற்றுப்பணியில் உள்ளவர்கள் | 5 |
| | **தற்பொழுது பணிபுரிபவர்களின் எண்ணிக்கை** (மகப்பேறு விடுப்பு, மாற்றுப்பணி மற்றும் நீண்ட விடுப்பு தவிர) | 91 |
| | **தேவைப்படும் மனிதவளம்** | 37 |

மேற்காண் பட்டியிலுள்ளபடி, தற்போது 37 செவிலியர் பணியாளர்கள் (Staff Nurse) மனிதவளம் தேவைப்படுகிறது. மேலும், தற்காலிகமாக செவிலியர் பணியாளர் பணியிடங்களை நிரப்புவதன் மூலமாக நிலையங்களுக்கு வரும் நோயாளிக்கான சிகிச்சைகள், கர்ப்பிணி பெண்களுக்கு பிரசவப்பதிவிலிருந்து அனைத்து சிகிச்சை கிடைக்க செய்தல், பிரசவம் பார்ப்பது, பிரசவத்தின் பின் பராமரிப்பு, குழந்தைகளுக்கு தேவையான தடுப்பூசிகள் வழங்குவது உள்ளிட்ட அனைத்து தாய்சேய் நலப்பணிகளின் செயல்திறனை அதிகரிப்பதுடன், மற்ற சுகாதார சிகிச்சை பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**மேலும், தற்போது பணிபுரிபவர்களின் அடிப்படையில் காலியாகவுள்ள பணியிடங்களை பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை வாயிலாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் நிரப்பும் வரை தற்போது நிலையங்களின் பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி முதற்கட்டமாக 20 செவிலியர் பணியாளர்கள் (Staff Nurse) தேவைப்படும் பணியிடங்களை மாநகராட்சியின் மூலம் முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கு** அனுமதியும், **மேலும்,** (Staff Nurse **Rs.18,000/-)** **20 செவிலியர் பணியாளர்களுக்கும் சேர்த்து மாதம் ஒன்றிற்கு தொகை ரூ.3,60,000/-ம் ஊதியச்செலவினம் தேவைப்படுகிறது.**

**அதற்கான செலவின நிதித்தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து** 03 **மாதங்களுக்கு ரூ.10,80,000/-ம் தொகையை ஒதுக்கீடு செய்து வழங்கவும், மேலும், மாமன்ற பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

**அலுவலக்குறிப்பு** :- மாமன்ற பார்வையிட்டு பதிவு செய்யலாம். ந.க.எண். 4452/2020/ME1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 360 நாள் 29.12.2022</u>**

பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 53

பொருள் : நீதிமன்ற வழக்குகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாவட்ட நீதிமன்றங்களில் கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பாக வழக்குகளில் ஆஜராக மாநகராட்சி நிலை வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட ஆலோசகர் பதவிக்கு வழக்கறிஞர்களை நியமனம் செய்தல் – மாமன்றத்தின் பின்னேற்பு மற்றும் அனுமதி வேண்டுவது - தொடர்பாக

பார்வை :

1. அரசாணை எண். 160 (நிலை), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27-08-1998.
2. மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல் முறைகள் உத்தரவு ந.க.எண். 5887/ 2011/ எம்.சி.10 நாள் 29-09-2021.
3. மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல் முறைகள் உத்தரவு ந.க.எண். 5887/ 2011/ எம்.சி.10 நாள் 16-5-2022.
4. வழக்கறிஞர்கள் திரு. C. தினேஷ்குமார் மற்றும் திரு. K. நாகராஜன் அவர்களின் ராஜினாமா கடிதங்கள் நாள் 30-8-2022.
5. மாநகராட்சி ஆணையரின் அவர்களின் ( ந.க. எண் 5887/ 2011/ எம்.சி.10 நாள் 29-08-2022) அறிவிப்பு.
6. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் 17-9-2022

******

பார்வை 1இல் கண்டுள்ள அரசாணையில், கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாவட்ட நீதிமன்றங்கள் அளவிலான வழக்குகளை கவனிக்க, நான்கு குடிமையியல் வழக்கறிஞர்கள் மற்றும் ஒரு குற்றவியல் வழக்கறிஞர் என ஐந்து வழக்கறிஞர்களை நியமித்துக்கொள்ள மாநகராட்சிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2இல் கண்டுள்ள ஆணையர் அவர்களின் செயல் முறைகள் உத்தரவின்படி திரு. V. கோபால கிருஷ்ணன், என்பவர் மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு, மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்கள் தொடர்பான (வருவாய் இனங்கள் தவிர்த்து ) அனைத்து வழக்குகளையும் கவனித்து வருகிறார்.

பார்வை 3இல் கண்டுள்ள ஆணையர் அவர்களின் செயல் முறைகள் உத்தரவின்படி, திருமதி. R. உமா, என்பவர் மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு, வடக்கு மண்டலம் தொடர்பான (வருவாய் இனங்கள் தவிர்த்து) அனைத்து வழக்குகளையும் கவனித்து வருகிறார்.

இந்நிலையில், மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாக பணிபுரிந்து வந்த திரு. C. தினேஷ் குமார் மற்றும் திரு. K. நாகராஜன் ஆகிய இருவரும் பார்வை 4இல் கண்டுள்ள கடிதங்கள் வாயிலாக தங்களது இராஜினாமா கடிதங்களை அளித்துள்ளனர்.

இதன் காரணமாக ஏற்பட்டுள்ள இரண்டு குடிமை வழக்கறிஞர், ஒரு குற்றவியல் வழக்கறிஞர் மற்றும் சட்ட ஆலோசகர்கள் காலிப்பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, பார்வை 5இல் காண் அறிவிப்பு மாவட்ட முதன்மை நீதிமன்றம் வாயிலாக 29-8-2022 அன்று வெளியிடப்பட்டது. அவ்வறிப்பினை தொடர்ந்து 09-09-2022ஆம் தேதி வரை 76 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

கோயம்புத்தூர் மாநகராட்சி நிலை வழக்கறிஞர் மற்றும் சட்ட ஆலோசகர் பதவிகளுக்கு வரப்பெற்ற 76 விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மாநகராட்சி நிலை வழக்கறிஞர் பதவிக்கு 50 வயதிற்குட்பட்டவர்களாகவும் (பார் கவுன்சில் பதிவு எண் அடிப்படையில்) 10 வருடங்களுக்கு மேலாக வழக்கறிஞர் தொழிலில் அனுபவம் உள்ளவர்களாகவும் இருப்பவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 17-9-2022 அன்று நேர்காணல் நடத்தப்பட்டதில் கீழ் கண்ட நான்கு வழக்கறிஞர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

1. B விஜயகுமார், B.Com., B.L., (Ms. No. 1703/ 2008)
2. N ராஜமாணிக்கம், B.Com., B.L., (Ms. No. 2243/ 2010)
3. K நிஜலிங்கப்பா, B.A., B.L., (Ms. No. 1827/ 2001)
4. K செந்தில்குமார், B.A., B.L., (Ms. No. 1415/ 1997)

சட்ட ஆலோசகர் பதவிக்கு 50 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் (பார் கவுன்சில் பதிவு எண் அடிப்படையில்) 15 வருடங்களுக்கு மேலாக வழக்கறிஞர் தொழிலில் அனுபவம் பெற்றவர்களாகவும் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 17-9-2022 அன்று நடத்தப்பட்ட நேர்காணலில் கீழ்கண்ட மூன்று நபர்கள் சட்ட ஆலோசகர் பதவிகளுக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை 6-ல் காண் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியின்படி பணி நியமனம் செய்யப்பட்டனர்.

1. திரு. S. அன்பு செழியன், B.A., B.L.,
2. திரு . M. முனிர் அகமது, B.A., B.L.,
3. திரு . A.K. ராஜேந்திரன், M.A., B.L.,

சட்ட ஆலோசகராக பணிபுரிந்து வந்த திரு. A.K. ராஜேந்திரன், M.A., B.L., அவர்கள் கடந்த 11.10.2022 அன்று காலமாகிவிட்டார்.

பார்வை 2, 3, மற்றும் 6ன்படி மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாகவும், சட்ட ஆலோசகர்களாகவும் நியமனம் செய்யப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பும், திரு. B விஜயகுமார், B.Com., B.L., (Ms. No. 1703/ 2008), திரு. N ராஜமாணிக்கம, B.Com., B.L., (Ms. No. 2243/ 2010), திரு. K நிஜலிங்கப்பா, B.A., B.L., (Ms. No. 1827/ 2001) ஆகிய மூன்று வழக்கறிஞர்களை மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாகவும், திரு. K. செந்தில்குமார், B.A., B.L., (Ms. No. 1415/ 1997) அவர்களை சட்ட ஆலோசகராகவும் நியமிக்க மாமன்றத்தின் அனுமதியும் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் . ந.க.எண். 5887/ 2011/ எம்.சி. 10

**மாநகர மன்ற தீர்மானம் எண் 361 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 54

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - 2022-23 முதல் 2024-25ம் ஆண்டிற்கான மாதந்திர வாடகை இனங்கள் - 08.12.2022 அன்று பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படைப்பு செய்வது – தொடர்பாக.

**பார்வை :** 1.. மாமன்ற தீர்மான எண்.177, நாள். 30.06.2022
2.. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தீர்மான எண்.70, நாள். 19.12.2022

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த 2022-23 முதல் 2024-25ம் ஆண்டிற்கான கீழ்கண்ட மாநகராட்சிக்கு சொந்தமான 52 மாதாந்திர வாடகை இனங்களுக்கு 08.12.2022 அன்று பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

**மாதாந்திர வாடகை இனங்களின் விபரம் :**

| வ. எண் | இனம் | கடை எண் | கடையின் அளவு சதுரடி |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.48 - சக்திரோடு புல் மார்க்கெட் - மாநகராட்சி வணிக வளாகம் | 2 | 110 |
| 2 | | 3 | 110 |
| 3 | | 4 | 228 |
| 4 | | 5 | 110 |
| 5 | வார்டு எண்.66 - புலியகுளம் சாலை சிறு காளியம்மன் தெரு - மாநகராட்சி வணிக வளாகம் கடை | 1 | 138 |
| 6 | | 2 | 138 |
| 7 | வார்டு எண்.67 - சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் மாமிச கடைகள் | 4 | 154 |
| 8 | | 7 | 16 |
| 9 | | 9 | 16 |
| 10 | | 10 | 16 |
| 11 | | 12 | 16 |
| 12 | | 13 | 16 |
| 13 | | 14 | 16 |
| 14 | | 15 | 16 |
| 15 | | 16 | 16 |
| 16 | | 17 | 16 |
| 17 | வார்டு எண்.70 - மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் சிவன் கோயில் அருகில் தரை தளம் மற்றும் முதல் தளம் - மாநகராட்சி வணிக வளாகம் | 5 | 160 |
| 18 | | 6 | 156 |
| 19 | வார்டு எண்.81 - தியாகி குமரன் வீதி - மாநகராட்சி வணிக வளாகம் | GF 4 | 112.125 |
| 20 | | GF 5 | 112.125 |
| 21 | | GF 6 | 112.125 |
| 22 | | GF 7 | 244.125 |
| 23 | | 8 | 112.125 |
| 24 | | 9 | 112.125 |
| 25 | | 10 | 112.125 |
| 26 | | 11 | 112.125 |
| 27 | | 12 | 112.125 |
| 28 | | 13 | 112.125 |
| 29 | | 14 | 244.125 |
| 30 | வார்டு எண். 81- முத்து விநாயகர் கோயில் தெரு - மாநகராட்சி வணிக வளாகம் | 11 | 365.2 |
| 31 | | 12 | 365.2 |
| 32 | வார்டு எண்.82 - ஒப்பணக்கார வீதி - மாநகராட்சி வணிக வளாகம் | 8 | 143.93 |
| 33 | | 9 | 196.8 |
| 34 | | 10 | 138.99 |
| 35 | | 11 | 120.75 |
| 36 | | 12 | 120.75 |
| 37 | | 13 | 197.76 |
| 38 | வார்டு எண்.83- நஞ்சப்பா ரோடு - மாநகராட்சி வணிக வளாகம் முதல் தளம் கிழக்கு பகுதி, முதல் தளம் வடக்கு பகுதி, மூன்றாம் தளம் கிழக்கு பகுதி அலுவலகம் - மாநகராட்சி வணிக வளாகம் | 2 | 1725 |
| 39 | | 3 | 1663 |
| 40 | | 3 | 2583 |
| 41 | | 6 | 1387 |
| 42 | வார்டு எண்.83 - திரு.வி.க. மார்க்கெட் - மாநகராட்சி வணிக வளாகம் | 1 | 60.75 |
| 43 | | 2 | 60.75 |
| 44 | | 5 | 60.75 |
| 45 | | 6 | 60.75 |
| 46 | | 8 | 60.75 |
| 47 | | 9 | 60.75 |
| 48 | வார்டு எண். 49 - காய்கடை மைதானம் கட்டப்பட்டுள்ள வணிக வளாக தரைதளம் கடைகள் | 1 | 121 |
| 49 | | 4 | 121 |
| 50 | | 6 | 110 |
| 51 | | 7 | 208 |
| 52 | வார்டு எண். 49 - செங்காடு மாநகராட்சி வணிக வளாகம் | 3 | 231 |

**அ)**

கீழ்குறிப்பிட்டுள்ள 40 கடைகளுக்கான பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு ஏலம் கோர ஏலதாரா்கள் ஒருவரும் முன்வரவில்லை. எனவே, இவ்வினங்களுக்கு மறு பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**ஏலம் கோரப்படாத கடைகளின் விபரம் :**

| வ. எண் | இனம் | கடை எண் | கடையின் அளவு சதுரடி |
|---|---|---|---|
| 1 | வாா்டு எண்.67 - சீனிவாசபுரம் தினசரி மாா்க்கெட் மாமிச கடைகள் | 4 | 154 |
| 2 | | 7 | 16 |
| 3 | | 9 | 16 |
| 4 | | 10 | 16 |
| 5 | | 12 | 16 |
| 6 | | 13 | 16 |
| 7 | | 14 | 16 |
| 8 | | 15 | 16 |
| 9 | | 16 | 16 |
| 10 | | 17 | 16 |
| 11 | வாா்டு எண்.70 - மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமாா்க்கெட் சிவன் கோயில் அருகில் தரை தளம் மற்றும் முதல் தளம் - மாநகராட்சி வணிக வளாகம் | 5 | 160 |
| 12 | | 6 | 156 |
| 13 | வாா்டு எண்.81 - தியாகி குமரன் வீதி - மாநகராட்சி வணிக வளாகம் | GF 4 | 112.125 |
| 14 | | GF 5 | 112.125 |
| 15 | | GF 6 | 112.125 |
| 16 | | GF 7 | 244.125 |
| 17 | | 8 | 112.125 |
| 18 | | 9 | 112.125 |
| 19 | | 10 | 112.125 |
| 20 | | 11 | 112.125 |
| 21 | | 12 | 112.125 |
| 22 | | 13 | 112.125 |
| 23 | | 14 | 244.125 |
| 24 | வாா்டு எண்.82- ஒப்பணக்கார வீதி - மாநகராட்சி வணிக வளாகம் | 8 | 143.93 |
| 25 | | 10 | 138.99 |
| 26 | | 11 | 120.75 |
| 27 | வாா்டு எண்.83 - நஞ்சப்பா ரோடு - மாநகராட்சி வணிக வளாகம் முதல் தளம் கிழக்கு பகுதி, முதல் தளம் வடக்கு பகுதி, மூன்றாம் தளம் கிழக்கு பகுதி அலுவலகம் - மாநகராட்சி வணிக வளாகம் | 2 | 1725 |
| 28 | | 3 | 1663 |
| 29 | | 3 | 2583 |
| 30 | | 6 | 1387 |
| 31 | வாா்டு எண்.83 - திரு.வி.க. மாா்க்கெட் - மாநகராட்சி வணிக வளாகம் | 1 | 60.75 |
| 32 | | 2 | 60.75 |
| 33 | | 5 | 60.75 |
| 34 | | 6 | 60.75 |
| 35 | | 9 | 60.75 |
| 36 | வாா்டு எண். 49 - காய்கடை மைதானம் கட்டப்பட்டுள்ள வணிக வளாக தரைதளம் கடைகள் | 1 | 121 |
| 37 | | 4 | 121 |
| 38 | | 6 | 110 |
| 39 | | 7 | 208 |
| 40 | வாா்டு எண். 49 - செங்காடு மாநகராட்சி வணிக வளாகம் | 3 | 231 |

**ஆ)**

கீழ்குறிப்பிட்டுள்ள கடைகளுக்கான பொது ஏலம்/மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு உயா்ந்த பட்சமாக ஏலக்கோரிக்கைகள் ஏலதாரா்களால் கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | கடை எண் | கடையின் அளவு சதுரடி | இனம் | உயா்ந்த பட்ச ஏலதாரா் பெயா் | உயா்ந்த பட்ச கேள்வி பொது / மின் ஏலம் ஒப்பந்தப்புள்ளி | அரசு மதிப்பு ரூ. | உயா்ந்த பட்ச கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 110 | வார்டு எண்.48 - சக்திரோடு புல் மார்க்கெட் - மாநகராட்சி வணிக வளாகம் | C. செல்வம் | ஒப்பந்தப்புள்ளி | 2860 | 2950 |
| 2 | 3 | 110 | | M. முபாரக் | ஒப்பந்தப்புள்ளி | 2860 | 3200 |
| 3 | 4 | 228 | | ப. முத்துசாமி | ஒப்பந்தப்புள்ளி | 5928 | 6200 |
| 4 | 5 | 110 | | ப. முத்துசாமி | ஒப்பந்தப்புள்ளி | 2860 | 3200 |
| 5 | 1 | 138 | வார்டு எண்.66 - புலியகுளம் சாலை சிறு காளியம்மன் தெரு - மாநகராட்சி வணிக வளாகம் கடை | N.செல்வி | ஒப்பந்தப்புள்ளி | 2952 | 3500 |
| 6 | 2 | 138 | | S. ரஞ்சிதா தேவி | ஒப்பந்தப்புள்ளி | 3400 | 3500 |
| 7 | 9 | 196.8 | வார்டு எண்.82 - ஒப்பணக்கார வீதி - மாநகராட்சி வணிக வளாகம் | A. ஷாகுல் அமீது | ஒப்பந்தப்புள்ளி | 9840 | 10300 |
| 8 | 12 | 120.75 | | வி.பி. முஹம்மது தொ.ஃபிக் | ஒப்பந்தப்புள்ளி | 3260 | 3300 |
| 9 | 13 | 197.76 | | வி.பி. முஹம்மது தொ.ஃபிக் | ஒப்பந்தப்புள்ளி | 9888 | 5100 |
| 10 | 8 | 60.75 | வார்டு எண்.83 - திரு.வி.க. மார்க்கெட் - மாநகராட்சி வணிக வளாகம் | M. கருணாநிதி | ஏலம் | 3219 | 3300 |

மேற்காணும் 10 கடைகளுக்கு வரப்பெற்றுள்ள உயர்ந்த பட்ச ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகையானது பார்வை (1)ன்படி, மாமன்ற தீர்மான எண்.177, நாள்.30.06.2022-ல் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பை காட்டிலும் வரிசை எண். 9 தவிர மற்ற கடைகளுக்கு கூடுதலாக உள்ளதால் மேற்காண் கடைகளுக்கு வரப்பெற்ற உயர்ந்த பட்ச கேள்வி தொகையை ஏற்று உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு அரசாணை (நிலை) எண்.92- நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007-ன் படி ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுக்கு கடையினை ஒப்படை செய்யலாம்.

வரிசை எண்.9-ல் குறிப்பிட்டுள்ள ஒப்பணக்கார வீதி மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.13-க்கு திரு.வி.பி.முஹம்மது தொ.ஃபிக் என்பவரால் ஒப்பந்தப்புள்ளி மூலம் மாத வாடகையாக ரூ.5100/-க்கு கோரப்பட்டுள்ளது. இது அரசு மதிப்பை காட்டிலும் ரூ.4788/-குறைவாக உள்ளது. இருப்பினும் இக்கடை கடந்த 5 ஆண்டுகளாக காலியாக இருந்து வருகிறது. எனவே, வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு தற்போது கோரியுள்ள உச்ச கேள்வித்தொகையினை ஏற்று ஒப்படை செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் பார்வை(2)-ல் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 70 நாள்.19.12.2022-இன் படி அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க. எண்.1865/2022/அ2,அ9(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 362 நாள் 29.12.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 55

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் - வார்டு எண். 83-க்குட்பட்ட காளீஸ்வரா மில் நகரில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான ஆயுர்வேதிக் கட்டிடத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் மாற்றுத் திறனாளி மகளிர் தொழில் செய்ய இலவசமாக அல்லது குறைந்தபட்ச வாடகை ரூ.5000/- நிர்ணயம் செய்து வழங்க - தொடர்பாக.

**பார்வை :**
1. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்களின் கடித எண்.155/2022, நாள்.31.05.2022.
2. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்களின் கடித நாள்.09.12.2022

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.83-க்குட்பட்ட காளீஸ்வரா மில் நகரில் அமைந்துள்ள கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான ஆயுர் வேதிக் மருத்தகக் கட்டிடத்தில் மாற்றுத் திறனாளி மகளிர்கள் சேர்ந்து தொழில் செய்ய சங்கத்திற்கு இடத்தை இலவசமாக வழங்குமாறு திருமதி.ஜெயப்பிரபா, உப்பிலிபாளையம், காட்டூர் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் மனு எண்.TN/DIFFABLE/CBE/P/CMTOUR/07DEC21/2618104, நாள்.07.12.2021-ன் வாயிலாக பார்வை (1)-ல் காணும் கடிதத்தில் மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர், கோயம்புத்தூர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

பார்வை (2)-ல் காணும் கடிதத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆரம்பநிலை பயிற்சிமையம் சமூக பொறுப்புணர்வு நிதி திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளதால் அவ்விடத்தை இலவசமாக ஒதுக்கீடு செய்து தந்தோ அல்லது குறைந்த பட்ச வாடகையாக ரூ.5000/- ஒதுக்கீடு செய்து தந்து மாற்றுத்திறனாளிகள் பயனடைவதற்கு உதவுமாறு கோரியுள்ளர்.

எனவே, மேற்படி கட்டிடத்தில் உள்ள 16மீ நீளம் 6.30மீ அகலத்தில் மொத்தப்பரப்பு 103.95ச.மீ (1118 ச.அடி) அளவுகள் கொண்ட 3 அறைகள் உபயோகப்படுத்தாமல் உள்ள மேற்படி கட்டிடத்தை மாற்றுத் திறனாளி மகளிர்கள் சேர்ந்து தொழில் செய்ய இலவசமாக அல்லது குறைந்தபட்ச வாடகை ரூ.5000/- என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 71 நாள்.19.12.2022-ன் படி அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க. எண்.166/2022/H1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 363 நாள் 29.12.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 56

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம்- வார்டு எண்.47 – மாநகராட்சிக்கு சொந்தமான உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒப்படை செய்வது – தொடர்பாக.

**பார்வை :**
1. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட தீர்மான எண்.367, நாள்.04.02.2016.
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட தீர்மான எண்.61, நாள்.19.12.2022.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.47 முத்துக்குமார் நகரில் மாநகராட்சிக்கு சொந்தமான உள்விளையாட்டு அரங்கம் (SHUTTLE COURT) மற்றும் உடற்பயிற்சிக் கூடம் மாநகராட்சியால் கட்டி முடிக்கப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட தீர்மான எண்.367, நாள்.04.02.2016-ன் படி முத்துகுமார் நகர், ஜி.பி.எம். நகர், பி.எம் சாமி காலனி, விஸ்வநாதபுரம், நடேச கவுண்டர் லே அவுட், பூம்புகார் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள நல சங்கங்களின் சார்பாக அந்த உள் விளையாட்டு அரங்கினை பராமரிப்பு செய்து கொள்வதற்கு பொறுப்பு மற்றும் நெறிமுறைகள், பொது விதிமுறைகள் நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்படை செய்யப்பட்டது. நாளது வரை அப்பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு வாடகையோ, கட்டணமோ, ஏதுமின்றி அச்சுற்றுவட்டார பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

களஆய்வில், உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் காலை 6 மணி முதல் 9 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையும் திறந்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தினசரி சுமார் 50 நபர்கள் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி செய்ய வந்து செல்கின்றனர்.

உதவிப் பொறியாளர் தனது 14.09.2022-ம் தேதிய குறிப்பில் உள்விளையாட்டு அரங்கம் (SHUTTLE COURT) மற்றும் உடற்பயிற்சிக் கூடம் ஆகியவற்றிற்கு பொதுப்பணித் துறையின் வழிகாட்டுதலின்படி மாதம் ஒன்றிற்கு வாடகையாக ரூ.54,450/- என நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே, முத்துகுமார் நகர், ஜி.பி.எம். நகர், பி.எம் சாமி காலனி, விஸ்வநாதபுரம், நடேச கவுண்டர் லே அவுட், பூம்புகார் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள நல சங்கங்களின் வாயிலாக உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உடற்பயிற்சி கூடம், நடத்திக் கொள்ள வழங்கப்பட்டதன் 5 ஆண்டு உரிம காலம் முடிவடைந்து விட்டதால் மேற்படி உள்விளையாட்டு அரங்கத்திற்கு பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி மாதம் ஒன்றுக்கு அரசு மதிப்பாக ரூ.54,450/- என வாடகை நிர்ணயம் செய்யவும், உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உடற்பயிற்சிக் கூடத்தை மாநகராட்சியால் பொறுப்பேற்று கொண்டு பொது ஏலம் மூலம் ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் தீர்மான எண்.61, நாள்.19.12.2022-ன் படி மாதம் ஒன்றுக்கு அரசு மதிப்பாக ரூ.40,000/- என நிர்ணயம் செய்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4262/2022/அ3/(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 364 நாள் 29.12.2022**

ஒத்திவைக்கப்பட்டது.

---

## பொருள் எண் 57

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – பொறியியல் பிரிவு – வார்டு எண்.91 க்குட்பட்ட கல்கி கார்டன் பகுதியில் கட்டப்பட்டுள்ள மரதளத்துடன் கூடிய இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கத்திற்கு மாத வாடகை நிர்ணயம் செய்தல் – தொடர்பாக.

**பார்வை:**
1. உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள். 23.12.2021
2. ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள். 14.7.2022
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மான எண்.41 நாள்.18.7.2022
4. உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள். 26.09.2022
5. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்டதீர்மானம் எண் 68 நாள் 19.12.2022

***********

பார்வை 1ல் காணும் உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் குறிப்பின் படியும், பார்வை 2ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படியும் பொருளில் கண்டுள்ளபடி வார்டு எண்:91–க்குட்பட்ட கல்கி கார்டனில் 3575.74சதுரடி பரப்பளவில் ரூ.64.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மரதளத்துடன் கூடிய இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கங்கத்திற்கு மாத வாடகை ரூ.89950/– என நிர்ணயம் செய்யப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்டத்தில் 18.7.2022ல் பொருள் வைக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிர்ணயித்த வாடகை தொகை அதிகம் என்றும், உள்ளூர் சந்தை மதிப்பின் அடிப்படையில் மாத வாடகை நிர்ணயம் செய்யவும் மற்றும் நபர் ஒன்றுக்கு உரிய கட்டணம் நிர்ணயம் செய்து ஏல நிபந்தனைகளுடன் பொருள் வைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பார்வை 4ல் காணும் உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் குறிப்பில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்படி உள்ளூர் தனியார் உள்விளையாட்டு அரங்கங்கத்தின் தனிநபர் கட்டணம் ஆய்வு செய்ததில் அவர்கள் தினசரி நபர் ஒன்றுக்கு ரூ.50 வீதம் கட்டணம் வசூல் செய்வதாக தெரியவருகிறது. மேலும் தினசரி 50 நபர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்ற விபரம் சமர்ப்பித்துள்ளார்.

**ஏல நிபந்தனைகள்**

1. உரிமையாணை இனங்களை ஒப்படைக்கும் தேதி முதல் மூன்று நிதியாண்டு காலத்திற்கு ஏலம் விடப்படும்.
2. ஏல இனங்களை ஒப்படைப்பு பெற ஏலம் அல்லது ஒப்பந்த புள்ளியின் படி உள்ள உயர்ந்த பட்ச கோரிக்கை தொகையினை, மேற்படி ஏலத்தை உறுதிசெய்வதற்கான அலுவலக உத்திரவு கிடைக்க பெற்ற 7 தினங்களுக்குள் முழுத் தொகையினையும் ஒரே தவணையில் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.(மாமன்ற தீர்மான எண் 315, நாள் 30.12.2002).
3. குத்தகை இனத்திற்க்கான வைப்புத்தொகை ரூ.2,00,000/- செலுத்தப்பட வேண்டும்.
4. குத்தகை இனத்திற்கான பயன்பாடு நேரம் காலை 5 மணி முதல் 9 மணி வரை மற்றும் மாலை 5 மணி முதல் 9 மணி வரை செயல்பட வேண்டும்.
5. குத்தகை இனமான உள்விளையாட்டு அரங்கத்தில் வேறு எவ்வித நிகழ்ச்சியும் நடைபெற அனுமதி இல்லை.
6. மேற்படி இனங்கள் அனைத்திற்கும் ஆண்டு உரிமைத் தொகை அடிப்படையில் ஏலம் விடப்படும். ஆரம்பத்தில் ஏலத்தில் பெறப்படும் உரிமைத் தொகையில் 2 ஆம் ஆண்டில் 5 சதவீதம் உரிமத் தொகை உயர்வும் 3 ஆம் ஆண்டில் 2 ஆம் ஆண்டு உரிமத் தொகையில் 5 சதவீதம் உரிமத் தொகை உயர்வு செய்யப்படும். முதல் வருட உரிமத் தொகை முழுவதையும் உரிமம் உறுதி செய்தவுடன் செலுத்தப்பட வேண்டும். 2 ஆம் ஆண்டு உரிமத் தொகையினை முதலாம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். 3 ஆம் ஆண்டு உரிமத் தொகையிகை 2 ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். மேற்கண்டவாறு உரிய காலத்திற்குள் உரிமத் தொகை செலுத்தாவிடில் இம்மாநகராட்சியின வருட உரிம இனங்களுக்கான ஏல நிபந்தனைகளில் கண்டுள்ளவாறு உரிமம் ரத்து செய்யப்பட்டு ஏலத்தாரர் பொறுப்பில் மறு ஏலம் விடப்படும்.

7. உரிமதாரர்கள் செலுத்திய வைப்புத் தொகையை 3 வருட காலம் உரிமம் முடிந்து தணிக்கை முடிந்த பின்னரே திரும்ப வழங்கப்படும். ஏல நிபந்தனைகளையும் தற்சமயம் அமலில் இருப்பதும் உரிமம் நடப்பு ஆண்டில் அப்போதைக்கப் போது மாநகர மன்றத்தாரால் தீர்மானிக்கப்படும் உத்திரவுகளுக்கும் உப விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதாக தன் சொந்த செலவில் ஏலம் உறுதி செய்து உத்திரவு பெற்ற 3 தினங்களுக்குள் ரூ.100/- மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும். மேலும் உரிமதாரா் மாநகராட்சியின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றேன் என்பதை முத்திரை தாள் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும்.
8. மேலே கண்ட பாராவில் சொல்லப்படிருக்கும் விதிகளின்படி தொகையை கட்ட தவறினாலோ மற்றும் ஒப்பந்தம் எழுதி கொடுக்க தவறினாலோ உரிமதாரர் தான் கட்டி இருக்கும் வைப்புத் தொகையை இழந்து விடுவதும் அல்லாமல் அவருடைய பொறுப்பின் பேரிலேயே அந்த உரிமத்தை மறு டெண்டா் மற்றும் ஏலம் விடப்படும். அதனால் ஏற்படும் நஷ்டம் முழுவதையும் அவரிடம் வசூல் செய்ய மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
9. உரிமதாரருக்கு கொடுக்கப்படும் அறிக்கை அல்லது உத்திரவுகள் அவரின் கடைசி குடியிருப்பிற்கு அல்லது தொழில் செய்யுமிடத்திற்கு அனுப்பப்பட்டால் அல்லது மேற்படி இடத்தில் ஒட்டப்பட்டால் அவரிடம் சரியான முறையில் சார்வு செய்ததாக கருதப்படும். உரிமதாரா்கள் மாநகர மன்றத்தாரால் நிர்ணயித்திருக்கும் கட்டணங்களுக்கு அதிகமாக கட்டணம் வசூல் செய்ய கூடாது. அப்படி அதிகப்படியாக வசூல் செய்வதாக நம்பும்படியாக உறுதி செய்யப்பட்டால் முதல் முறை மற்றும் இரண்டாவது முறை ரூபாய் 10,000/- அபராதம் விதிக்கப்படும் மேலும் தொடரும்பட்சத்தில் ஏல உரிமத்தை ரத்து செய்வதுடன் உரிமைதாரா் கட்டியிருக்கும் பொறுப்பு தொகைகளை இழக்க நேரிடும் .
10. குத்தகை உரிமம் பெற்றவா் குத்தகை இனத்திற்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணங்களை மட்டும் வசூலித்தல் வேண்டும். இதற்கான ரசீதுகள் குத்தகைதாரா்களே அச்சிட்டு மாநகராட்சியின் முத்திரை பெற்று வழங்கப்பட வேண்டும். உரிமதாராருக்கு தேவைப்படும் ரசீது புத்தகங்களை ஒரு வார காலத்திற்கு முன்னரே மாநகராட்சி முத்திரை பெற்று இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும் . அவ்வாறு ரசீதுகள் வழங்கப்படாமலும் மாநகராட்சியின் முத்திரை இடப்படாமலும் இருக்கும் பட்சத்தில் ரூபாய் 10000/- க்கும் குறைவில்லாமல் அபராதம் வசூலிக்கப்படும். மேலும் இதுபோன்ற தவறுகள் ஏற்படும் பட்சத்தில் உரிமத்தினை மாமன்றத்தில் அனுமதி பெற்று ரத்து செய்யப்படும்.
11. ஒவ்வொரு நாளும் வசூல் செய்யும் உரிமையாணை பற்றி கணக்கு விபரம் சரியாக எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். அக்கணக்குகளை பரிசீலனை செய்ய மாநகராட்சி அலுவலா்களுக்கும் சிப்பந்திகளுக்கும் உரிமை உண்டு. ஆணையா் அல்லது அவா் அதிகாரம் பெற்றவா் மேற்படி கணக்குளை எந்த நேரத்தில் வேண்டுமானலும் பார்வையிட உரிமையாணை பெற்றவா் அனுமதிக்க வேண்டும். உரிம காலத்தில் உரிமையாணை பெற்றவா் பிறர்பேரிலாவது அல்லது உரிமையாணை பெற்றவா் பேரிலாவது வழக்குகள் பிறரால் தொடரப்பட்டால் அவைகளுக்காக ஏற்படும் பொருட் செலவினை மாநகராட்சி ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் மாநகராட்சி எந்தவிதத்திலும் பொறுப்பேற்று கொள்ளாது. மேலும் உரிம காலத்தில் உரிமையாணை பெற்றவா் வசூல் செய்வதில் எவ்வித தடங்கல், தாமதம் அல்லது வேறு இடையூறுகள் ஏதும் ஏற்படாமல் அது சம்மந்தமாக வழக்குகள் தொடா்ந்தாலும் அவா்கள் பொறுப்பிலேயே அதற்கான இழப்பீடுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். மாநகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது
12. மத்திய மாநில அரசு துறைகளான வருமான வரித்துறை, கலால் வரித்துறை மற்றும் இதரத்துறைகளால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின்படி சேவைவரி மற்றும் இதர வரிகளையும் உரிமத் தொகையுடன் சோ்த்து செலுத்தப்பட வேண்டும்.பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் குத்தகைதாரா்கள் கண்டிப்பாக PAN NO & ADHAAR CARD பெற்று இருத்தல் வேண்டும்.இவை இல்லாதவா்கள் கண்டிப்பாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.
13. உரிமம் பெற்ற ஏலதாரா்களிடமிருந்து தொழில்வரி வசூல் செய்து கொண்டு உரிமம் ஒப்படை செய்யப்படும். மேலும் குத்தகைதாரரால் வேலைக்கு அமா்த்தப்பட்டிருக்கும் வேலையாட்களுக்கு மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில்வரியினை செலுத்தல் வேண்டும்.

14. உரிமதாரர்கள் மேற்காண் நிபந்தனைகளின்படி நடக்க தவறினால் ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் ரூபாய் 10,000/-க்கும் குறைவில்லாமல் அபராதம் விதிக்கவோ அல்லது உரிமத்தை ரத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி உள் விளையாட்டு அரங்கில் தினந்தோறும் **40** நபர்கள் விளையாடுவார்கள் என தெரிய வருகிறது. இதன் அடிப்படையில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்டத்தின் தீர்மானத்தின்படி வாடகை குறைத்து நபர் ஒன்றுக்கு ரூ.**40** வீதம் ஒரு நாளைக்கு **40** நபர்கள் எனக்கணக்கீடு செய்து ரூ.**1600/– (40*40)** ஒரு நாள் வாடகை என்றும், மேலும் மாத வாடகை ரூ.**48000 (30*1600)** ஒரு வருட வாடகை ரூ.**5,76,000/– (12*48,000)** மற்றும் ஏல நிபந்தனைகள்படி நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு கூட்டத்தாள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டதில். பார்வை **5**–ல் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மானம் எண் **68** நாள் **19.12.2022**–ன் படி நபர் ஒன்றுக்கு நாள் வாடகை ரூ.**50/–** வீதம் மாத வாடகை ரூ.**60,000/–** என நிர்ணயம் செய்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

எனவே மேற்காணும் பொது ஏல நிபந்தனைகளின் அடிப்படையில் இவ்வினத்தினை குத்தகை இனமாக கருதி பொது ஏலம் மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தாள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்:**91/22/**அ**1**(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 365 நாள் 29.12.2022**

ஒத்திவைக்கப்பட்டது.

---

## பொருள் எண் 58

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – பொறியியல் பிரிவு – வார்டு எண்.**89** க்குட்பட்ட சமீம் கார்டன் பகுதியில் கட்டப்பட்டுள்ள மரதளத்துடன் கூடிய இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கத்திற்கு மாத வாடகை நிர்ணயம் செய்தல் – தொடர்பாக

பார்வை: **1.** உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள். **23.12.2021 2.** ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள். **14.7.2022**
**3.** வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மான எண்.**41** நாள்.**18.7.2022**
**4.** உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள். **26.09.2022**
**5.** வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்டதீர்மானம் எண் 66 நாள் 19.12.2022

பார்வை **1**ல் காணும் உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் குறிப்பின் படியும், பார்வை **2**ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படியும் பொருளில் கண்டுள்ளபடி வார்டு எண்:**89**–க்குட்பட்ட சமீம் கார்டனில் **3535.66**சதுரடி பரப்பளவில் ரூ.**64.90** இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மரதளத்துடன் கூடிய இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கங்கத்திற்கு மாத வாடகை ரூ.**82600**ஃ– என நிர்ணயம் செய்யப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்டத்தில் **18.7.2022**ல் பொருள் வைக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிர்ணயித்த வாடகை தொகை அதிகம் என்றும், உள்ளூர் சந்தை மதிப்பின் அடிப்படையில் மாத வாடகை நிாணயம் செய்யவும் மற்றும் நபர் ஒன்றுக்கு உரிய கட்டணம் நிர்ணயம் செய்து ஏல நிபந்தனைகளுடன் பொருள் வைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பார்வை **4**ல் காணும் உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் குறிப்பில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்படி உள்ளூர் தனியார் உள்விளையாட்டு அரங்கங்கத்தின் தனிநபர் கட்டணம் ஆய்வு செய்ததில் அவர்கள் தினசரி நபர் ஒன்றுக்கு ரூ.**50** வீதம் கட்டணம் வசூல் செய்வதாக தெரியவருகிறது. மேலும் தினசரி **50** நபர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்ற விபரம் சமர்ப்பித்துள்ளார்.

## ஏல நிபந்தனைகள்

1. உரிமையாணை இனங்களை ஒப்படைக்கும் தேதி முதல் மூன்று நிதியாண்டு காலத்திற்கு ஏலம் விடப்படும்.
2. ஏல இனங்களை ஒப்படைப்பு பெற ஏலம் அல்லது ஒப்பந்த புள்ளியின் படி உள்ள உயர்ந்த பட்ச கோரிக்கை தொகையினை, மேற்படி ஏலத்தை உறுதிசெய்வதற்கான அலுவலக உத்திரவு கிடைக்க பெற்ற 7 தினங்களுக்குள் முழுத் தொகையினையும் ஒரே தவணையில் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.(மாமன்ற தீர்மான எண் 315, நாள் 30.12.2002).
3. குத்தகை இனத்திற்க்கான வைப்புத்தொகை ரூ.2,00,000/- செலுத்தப்பட வேண்டும்.
4. குத்தகை இனத்திற்கான பயன்பாடு நேரம் காலை 5 மணி முதல் 9 மணி வரை மற்றும் மாலை 5 மணி முதல் 9 மணி வரை செயல்பட வேண்டும்.
5. குத்தகை இனமான உள்விளையாட்டு அரங்கத்தில் வேறு எவ்வித நிகழ்ச்சியும் நடைபெற அனுமதி இல்லை.
6. மேற்படி இனங்கள் அனைத்திற்கும் ஆண்டு உரிமைத் தொகை அடிப்படையில் ஏலம் விடப்படும். ஆரம்பத்தில் ஏலத்தில் பெறப்படும் உரிமைத் தொகையில் 2 ஆம் ஆண்டில் 5 சதவீதம் உரிமத் தொகை உயர்வும் 3 ஆம் ஆண்டில் 2 ஆம் ஆண்டு உரிமத் தொகையில் 5 சதவீதம் உரிமத் தொகை உயர்வு செய்யப்படும். முதல் வருட உரிமத் தொகை முழுவதையும் உரிமம் உறுதி செய்தவுடன் செலுத்தப்பட வேண்டும். 2 ஆம் ஆண்டு உரிமத் தொகையினை முதலாம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். 3 ஆம் ஆண்டு உரிமத் தொகையிகை 2 ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். மேற்கண்டவாறு உரிய காலத்திற்குள் உரிமத் தொகை செலுத்தாவிடில் இம்மாநகராட்சியின வருட உரிம இனங்களுக்கான ஏல நிபந்தனைகளில் கண்டுள்ளவாறு உரிமம் ரத்து செய்யப்பட்டு ஏலத்தாரர் பொறுப்பில் மறு ஏலம் விடப்படும்.
7. உரிமதாரர்கள் செலுத்திய வைப்புத் தொகையை 3 வருட காலம் உரிமம் முடிந்து தணிக்கை முடிந்த பின்னரே திரும்ப வழங்கப்படும். ஏல நிபந்தனைகளையும் தற்சமயம் அமலில் இருப்பதும் உரிமம் நடப்பு ஆண்டில் அப்போதைக்கப் போது மாநகர மன்றத்தாரால் தீர்மானிக்கப்படும் உத்திரவுகளுக்கும் உப விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதாக தன் சொந்த செலவில் ஏலம் உறுதி செய்து உத்திரவு பெற்ற 3 தினங்களுக்குள் ரூ.100/- மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும். மேலும் உரிமதாரர் மாநகராட்சியின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றேன் என்பதை முத்திரை தாள் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும்.
8. மேலே கண்ட பாராவில் சொல்லப்படிருக்கும் விதிகளின்படி தொகையை கட்ட தவறினாலோ மற்றும் ஒப்பந்தம் எழுதி கொடுக்க தவறினாலோ உரிமதாரர் தான் கட்டி இருக்கும் வைப்புத் தொகையை இழந்து விடுவதும் அல்லாமல் அவருடைய பொறுப்பின் பேரிலேயே அந்த உரிமத்தை மறு டெண்டர் மற்றும் ஏலம் விடப்படும். அதனால் ஏற்படும் நஷ்டம் முழுவதையும் அவரிடம் வசூல் செய்ய மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
9. உரிமதாரருக்கு கொடுக்கப்படும் அறிக்கை அல்லது உத்திரவுகள் அவரின் கடைசி குடியிருப்பிற்கு அல்லது தொழில் செய்யுமிடத்திற்கு அனுப்பப்பட்டால் அல்லது மேற்படி இடத்தில் ஒட்டப்பட்டால் அவரிடம் சரியான முறையில் சார்வு செய்ததாக கருதப்படும். உரிமதாரர்கள் மாநகர மன்றத்தாரால் நிர்ணயித்திருக்கும் கட்டணங்களுக்கு அதிகமாக கட்டணம் வசூல் செய்ய கூடாது. அப்படி அதிகப்படியாக வசூல் செய்வதாக நம்பும்படியாக உறுதி செய்யப்பட்டால் முதல் முறை மற்றும் இரண்டாவது முறை ரூபாய் 10,000/- அபராதம் விதிக்கப்படும் மேலும் தொடரும்பட்சத்தில் ஏல உரிமத்தை ரத்து செய்வதுடன் உரிமைதாரர் கட்டியிருக்கும் பொறுப்பு தொகைகளை இழக்க நேரிடும் .
10. குத்தகை உரிமம் பெற்றவர் குத்தகை இனத்திற்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணங்களை மட்டும் வசூலித்தல் வேண்டும். இதற்கான ரசீதுகள் குத்தகைதாரர்களே அச்சிட்டு மாநகராட்சியின் முத்திரை பெற்று வழங்கப்பட வேண்டும். உரிமதாராருக்கு தேவைப்படும் ரசீது புத்தகங்களை ஒரு வார காலத்திற்கு முன்னரே மாநகராட்சி முத்திரை பெற்று இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும் . அவ்வாறு ரசீதுகள் வழங்கப்படாமலும் மாநகராட்சியின் முத்திரை இடப்படாமலும் இருக்கும் பட்சத்தில் ரூபாய் 10000/- க்கும் குறைவில்லாமல் அபராதம் வசூலிக்கப்படும். மேலும் இதுபோன்ற தவறுகள் ஏற்படும் பட்சத்தில் உரிமத்தினை மாமன்றத்தில் அனுமதி பெற்று ரத்து செய்யப்படும்.

11. ஒவ்வொரு நாளும் வசூல் செய்யும் உரிமையாணை பற்றி கணக்கு விபரம் சரியாக எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். அக்கணக்குகளை பரிசீலனை செய்ய மாநகராட்சி அலுவலர்களுக்கும் சிப்பந்திகளுக்கும் உரிமை உண்டு. ஆணையர் அல்லது அவர் அதிகாரம் பெற்றவர் மேற்படி கணக்குளை எந்த நேரத்தில் வேண்டுமானலும் பார்வையிட உரிமையாணை பெற்றவர் அனுமதிக்க வேண்டும். உரிம காலத்தில் உரிமையாணை பெற்றவர் பிறர்பேரிலாவது அல்லது உரிமையாணை பெற்றவர் பேரிலாவது வழக்குகள் பிறரால் தொடரப்பட்டால் அவைகளுக்காக ஏற்படும் பொருட் செலவினை மாநகராட்சி ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் மாநகராட்சி எந்தவிதத்திலும் பொறுப்பேற்று கொள்ளாது. மேலும் உரிம காலத்தில் உரிமையாணை பெற்றவர் வசூல் செய்வதில் எவ்வித தடங்கல், தாமதம் அல்லது வேறு இடையூறுகள் ஏதும் ஏற்படாமல் அது சம்மந்தமாக வழக்குகள் தொடர்ந்தாலும் அவர்கள் பொறுப்பிலேயே அதற்கான இழப்பீடுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். மாநகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது
12. மத்திய மாநில அரசு துறைகளான வருமான வரித்துறை, கலால் வரித்துறை மற்றும் இதரத்துறைகளால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின்படி சேவைவரி மற்றும் இதர வரிகளையும் உரிமத் தொகையுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் குத்தகைதாரர்கள் கண்டிப்பாக PAN NO & ADHAAR CARD பெற்று இருத்தல் வேண்டும்.இவை இல்லாதவர்கள் கண்டிப்பாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.
13. உரிமம் பெற்ற ஏலதாரர்களிடமிருந்து தொழில்வரி வசூல் செய்து கொண்டு உரிமம் ஒப்படை செய்யப்படும். மேலும் குத்தகைதாரரால் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் வேலையாட்களுக்கு மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில்வரியினை செலுத்தல் வேண்டும்.
14. உரிமதாரர்கள் மேற்காண் நிபந்தனைகளின்படி நடக்க தவறினால் ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் ரூபாய் 10,000/-க்கும் குறைவில்லாமல் அபராதம் விதிக்கவோ அல்லது உரிமத்தை ரத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி உள் விளையாட்டு அரங்கில் தினந்தோறும் 40 நபர்கள் விளையாடுவார்கள் என தெரிய வருகிறது. இதன் அடிப்படையில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்டத்தின் தீர்மானத்தின்படி வாடகை குறைத்து நபர் ஒன்றுக்கு ரூ.40 வீதம் ஒரு நாளைக்கு 40 நபர்கள் எனக்கணக்கீடு செய்து ரூ.1600/– (40*40) ஒரு நாள் வாடகை என்றும், மேலும் மாத வாடகை ரூ.48000/– (30*1600) ஒரு வருட வாடகை ரூ.5,76,000/– (12*48,000) மற்றும் ஏல நிபந்தனைகள்படி நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு கூட்டத்தாள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டதில். பார்வை 5–ல் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மானம் எண் 66 நாள் 19.12.2022–ன் படி நபர் ஒன்றுக்கு நாள் வாடகை ரூ.50/– வீதம் மாத வாடகை ரூ.60,000/– என நிர்ணயம் செய்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

எனவே மேற்காணும் பொது ஏல நிபந்தனைகளின் அடிப்படையில் இவ்வினத்தினை குத்தகை இனமாக கருதி பொது ஏலம் மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தாள் சமர்ப்பிக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்:91/22/அ1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 366 நாள் 29.12.2022**

ஒத்திவைக்கப்பட்டது.

---

## பொருள் எண் 59

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – வார்டு எண்.99 காணியப்ப கோனார் வீதியில் கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்தல் – தொடர்பாக

பார்வை:
1. உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள். 13.10.2022
2. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்டதீர்மானம் எண் 62 நாள் 19.12.2022

*************

பார்வை(1)ல் காணும் உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் குறிப்பின் படி வார்டு எண்:99–க்குட்பட்ட கானியப்ப கோனார் வீதியில் 1192.64 சதுரடி பரப்பளவில் ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உடற்பயிற்சி கூடம் உள்ளது. இந்த உடற்பயிற்சி கூடத்தில் தினந்தோறும் 20 நபர்கள் விளையாடுவார்கள் என தெரிய வருகிறது. இக்கூடத்திற்கு PLINTH AREA RATE மதிப்பின்படி மாத வாடகை ரூ.56330/– என கணக்கிடப்பட்டுள்ளது.

உள்ளூர் சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை நபர் ஒன்றுக்கு ரூ.50/– வீதம் ஒரு நாளைக்கு 20 நபர்கள் எனக்கணக்கீடு செய்து ரூ.1000/– (50*20) ஒரு நாள் வாடகை என்றும், மேலும் மாத வாடகை ரூ.30000/– (30*1000) மற்றும் ஒரு வருட வாடகை ரூ.3,60,000/– (12*30000) என்றும் கணக்கிடப்பட்டுள்ளது என்ற விபரம் சமர்ப்பித்துள்ளார்.

ஏல நிபந்தனைகள்

1. உரிமையாணை இனங்களை ஒப்படைக்கும் தேதி முதல் மூன்று நிதியாண்டு காலத்திற்கு ஏலம் விடப்படும்.
2. ஏல இனங்களை ஒப்படைப்பு பெற ஏலம் அல்லது ஒப்பந்த புள்ளியின் படி உள்ள உயர்ந்த பட்ச கோரிக்கை தொகையினை, மேற்படி ஏலத்தை உறுதிசெய்வதற்கான அலுவலக உத்திரவு கிடைக்க பெற்ற 7 தினங்களுக்குள் முழுத் தொகையினையும் ஒரே தவணையில் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.(மாமன்ற தீர்மான எண் 315, நாள் 30.12.2002).
3. குத்தகை இனத்திற்க்கான வைப்புத்தொகை ரூ.1,00,000/- செலுத்தப்பட வேண்டும்.
4. குத்தகை இனத்திற்கான பயன்பாடு நேரம் காலை 5 மணி முதல் 9 மணி வரை மற்றும் மாலை 5 மணி முதல் 9 மணி வரை செயல்பட வேண்டும்.
5. குத்தகை இனமான உள்விளையாட்டு அரங்கத்தில் வேறு எவ்வித நிகழ்ச்சியும் நடைபெற அனுமதி இல்லை.
6. மேற்படி இனங்கள் அனைத்திற்கும் ஆண்டு உரிமைத் தொகை அடிப்படையில் ஏலம் விடப்படும். ஆரம்பத்தில் ஏலத்தில் பெறப்படும் உரிமைத் தொகையில் 2 ஆம் ஆண்டில் 5 சதவீதம் உரிமத் தொகை உயர்வும் 3 ஆம் ஆண்டில் 2 ஆம் ஆண்டு உரிமத் தொகையில் 5 சதவீதம் உரிமத் தொகை உயர்வு செய்யப்படும். முதல் வருட உரிமத் தொகை முழுவதையும் உரிமம் உறுதி செய்தவுடன் செலுத்தப்பட வேண்டும். 2 ஆம் ஆண்டு உரிமத் தொகையினை முதலாம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். 3 ஆம் ஆண்டு உரிமத் தொகையிகை 2 ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். மேற்கண்டவாறு உரிய காலத்திற்குள் உரிமத் தொகை செலுத்தாவிடில் இம்மாநகராட்சியின வருட உரிம இனங்களுக்கான ஏல நிபந்தனைகளில் கண்டுள்ளவாறு உரிமம் ரத்து செய்யப்பட்டு ஏலத்தாரர் பொறுப்பில் மறு ஏலம் விடப்படும்.
7. உரிமதாரர்கள் செலுத்திய வைப்புத் தொகையை 3 வருட காலம் உரிமம் முடிந்து தணிக்கை முடிந்த பின்னரே திரும்ப வழங்கப்படும். ஏல நிபந்தனைகளையும் தற்சமயம் அமலில் இருப்பதும் உரிமம் நடப்பு ஆண்டில் அப்போதைக்கப் போது மாநகர மன்றத்தாரால் தீர்மானிக்கப்படும் உத்திரவுகளுக்கும் உப விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதாக தன் சொந்த செலவில் ஏலம் உறுதி செய்து உத்திரவு பெற்ற 3 தினங்களுக்குள் ரூ.100/- மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும். மேலும் உரிமதாரர் மாநகராட்சியின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றேன் என்பதை முத்திரை தாள் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும்.
8. மேலே கண்ட பாராவில் சொல்லப்படிருக்கும் விதிகளின்படி தொகையை கட்ட தவறினாலோ மற்றும் ஒப்பந்தம் எழுதி கொடுக்க தவறினாலோ உரிமதாரர் தான் கட்டி இருக்கும் வைப்புத் தொகையை இழந்து விடுவதும் அல்லாமல் அவருடைய பொறுப்பின் பேரிலேயே அந்த உரிமத்தை மறு டெண்டர் மற்றும் ஏலம் விடப்படும். அதனால் ஏற்படும் நஷ்டம் முழுவதையும் அவரிடம் வசூல் செய்ய மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
9. உரிமதாரருக்கு கொடுக்கப்படும் அறிக்கை அல்லது உத்திரவுகள் அவரின் கடைசி குடியிருப்பிற்கு அல்லது தொழில் செய்யுமிடத்திற்கு அனுப்பப்பட்டால் அல்லது மேற்படி இடத்தில் ஒட்டப்பட்டால் அவரிடம் சரியான முறையில் சார்வு செய்ததாக கருதப்படும். உரிமதாரர்கள் மாநகர மன்றத்தாரால் நிர்ணயித்திருக்கும் கட்டணங்களுக்கு அதிகமாக கட்டணம் வசூல் செய்ய கூடாது. அப்படி அதிகப்படியாக வசூல் செய்வதாக நம்பும்படியாக உறுதி செய்யப்பட்டால் முதல் முறை மற்றும் இரண்டாவது முறை ரூபாய் 10,000/- அபராதம் விதிக்கப்படும் மேலும் தொடரும்பட்சத்தில் ஏல உரிமத்தை ரத்து செய்வதுடன் உரிமைதாரர் கட்டியிருக்கும் பொறுப்பு தொகைகளை இழக்க நேரிடும் .
